தீபம் : 02

# ஆத்மஜோதி

ஒளி : 15
ஆத்மீக மாத சஞ்சிகை
ஆடி - 2006

06 JUL 2006



## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | சமயோஜித புத்தி |
| மிகக் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான வி யம் | பொறாமை |
| நம்பக்கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிகப்பேச்சு |
| செய்யக்கூடாதது | உபதேசம் |
| செய்ய வேண்டியது | உதவி |
| விலக்க வேண்டியது | விவாதம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | வாய்ப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபம் : ஒளி
பார்திப வருடம்
ஆடி
2006

பதிப்பாசிரியர்
நா. முருகையா
தியான
மணிமண்டபம்

எழுத்தமைப்பும்
அச்சுப் பதிப்பும்
ஐய்ராம்
பிறின்ரேஸ்

வெளியீடு
ஆத்மஜோதி
தியான
மணிமண்டபம்
ஏழாலை.


தொடர்பு முகவரி
நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.



சிவமயம்
ஆத்மஜோதி
தாபிதம் : 1948
ARTHMAJOTHY
Est. 1948
ISSN 17039185


# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மாவைக் கந்தனின் பஜனைப் பாடல் | 02 |
| 2. | குகன் | 03 |
| 3. | தியானம் | 05 |
| 4. | மாருதப்புரவீகவல்லி அமைத்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் | 07 |
| 5. | பிரார்த்தனையின் அவசியமும் கடவுள் நம்பிக்கையும் | 09 |
| 6. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்..... | 11 |
| 7. | இறைவனைக் காண்பது எங்கே | 12 |
| 8. | ஓ திராட்சைப் பழங்களே | 14 |
| 9. | சமய இசைவினை நோக்கி | 16 |
| 10. | இராமதாச தரிசனம் | 18 |
| 11. | தம்பி தங்கக் கம்பி | 23 |
| 12. | சாமி யார் | 24 |
| 13. | ஈசன் மெயில் | 27 |
| 14. | ஆறு சீரிய குணங்கள் | 28 |
| 15. | பஜ கோவிந்தம் | 31 |
| 16. | ஆனந்தம் எங்குள்ளது | 32 |
| 17. | மனதை விட்டகலாத | 34 |
| 18. | ஆத்திசூடி-விளக்கத்துடன் (14-21) | 35 |


| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தனின் பஜனைப் பாடல்

ஆதி மாவைக் கந்தனே வேல் வேல் வேல்
அம்பிகையான் மைந்தனே வேல் வேல் வேல்
சோதி மயில் வாகனா வேல் வேல் வேல்
சுந்தரியாள் மோகனா வேல் வேல் வேல்

பன்னிருகை நாதனே வேல் வேல் வேல்
பயம் தீர்க்கும் பாதனே வேல் வேல் வேல்
மன்னுசதுர் வேதனே வேல் வேல் வேல்
மங்கள விநோதனே வேல் வேல் வேல்

ஆறுபடை ராசனே வேல் வேல் வேல்
அடியவரின் நேசனே வேல் வேல் வேல்
பேறுசுகம் தருபவனே வேல் வேல் வேல்
பிரணவமாய் வருவோனே வேல் வேல் வேல்

குஞ்சரியாள் நாயகனே வேல் வேல் வேல்
குறவள்ளி நாயகனே வேல் வேல் வேல்
சஞ்சலங்கள் தீர்ப்பவனே வேல் வேல் வேல்
தாளிணையிற் சேர்ப்பவனே வேல் வேல் வேல்

சிவசுப்ர மண்யனே வேல் வேல் வேல்
செஞ்சேவற் கொடியனே வேல் வேல் வேல்
தவசித்தி நலந்தருவாய் வேல் வேல் வேல்
சண்முகனே குருபரனே வேல் வேல் வேல்

ஈசனருட் செல்வனே வேல் வேல் வேல்
இளமுருகச் செல்வனே வேல் வேல் வேல்
பேசுமறைச் செல்வனே வேல் வேல் வேல்
பிழைபொறுக்கும் செல்வனே வேல் வேல் வேல்

*அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகன்

- ஆத்மஜோதி -

கலியுக வரதன் முருகப்பெருமான் ஓர் உருவமும் ஒரு குணமும் ஒரு பெயரும் ஓர் இடமும் இல்லாதவர். அந்த முருகப்பெருமானுக்குப் பல பெயர்கள் கூறி அர்ச்சித்து அடியவர்கள் வழிபடுகின்றனர். அவைகள் காரணப் பெயர்களாகும். முருகப்பெருமானுடைய பெருமைகளை அவைகள் உணர்த்துவதாகும். உதாரணம்: சுப்பிரமணியர் என்ற நாமம் மங்களம் நிறைந்த வேதஸ்வரூபி என்ற கருத்தை உணர்த்துவதாகும்.

கார்த்திகேயன் என்ற நாமம் கிருத்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். ஸ்கந்தன் என்ற நாமம் சிவமாகிய பெரும் நெருப்பிலிருந்து சிறு பொறியாக வெளிவந்தவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். இவ்வாறு பெயர்கள் யாவும் காரணங்கொண்டு அமையப் பெற்றனவாகும். இவைகளுள் தலைசிறந்தனவாயும் உபநிடதங்களில் போற்றிப் புகழப்படுவதும் இடப்பெயராகவும் அமைந்தது குகன் என்னும் நாமமாகும்.

கைவல்ய உபநிடதத்தில்

"மரம த்மரூபம் குதகாசயம் நிஷ்களம் அத்துவித்யம்
பிர்ம யோ வேத நிஹிதம் குகாயாம"

என்ற மந்திரம் காணப்படுகிறது. இதன் கருத்து பரமான்ம சொரூபியும் கலையற்றவரும் தனக்கு நிகரற்றவரும் குகையில் உறைபவருமாகிய பரம் பொருளை எவன் அறிகின்றானோ அவன் என்பதாகும். சகல ஜீவராசிகளின் ஹிருத யாகத்தைக் குகை என்பதும் அதில் உறைபவன் குகன் என்பதும் அவனே பரம்பொருள் என்பதும் உபநிடத மந்திரத்தின் விளக்கமாகும். குகன் என்ற நாமம் இட ஆகுபெயராக அமைந்தது. அந்தக் குகன் என்னும் நாமம் சிவத்தையே குறிப்பதாகும். முருகனும் சிவனும் அபின்னமானதால் (பிரிக்க முடியாததலால்) முருகனுக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது.

குகேதி தகராகாசஹ் வேதாந்தேஷு பட்யதே
தன்னிஷ்டோயம் குக: ப்ரோக்த: ஸர்வஹிருத் கமலாஸந:

தகராகாசத்திற்குக் குகை என்ற பெயர் வேதாந்த நூல்களில் வழங்கப் பட்டுள்ளது. அந்தக் குகையில் உறைவதால் குகன் என்று அழைக்கப்படுகிறான். அவன் எல்லோருடைய இருதயக் கமலத்தையும் இருப்பிடமாகக் கொண்டவன். இவ்வாறு குகன் என்ற நாமாவுக்குப் பெருமையை உபநிடதங்கள் விளக்கி உள்ளன.

முருகனடியார் எவ்வாறு விளங்குவார்? எவ்வாறு முருகனை வழிபடுவார்? அவர்கள் உள்ளம் எத்தகையது? அவர்கள் பெறும் பாக்கியம் என்ன? என்ற வினாக்களுக்கு ஏற்ற மறுமொழியாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறைப் போதெழுந் தாறெழுத் தோதிட
வாரியோ டமருதீர்வை
வார்புனன் மூழ்கிவெண் ணீறப்பி யக்கமணி
மார்புறவ ணிந்திருந்து
மாசக்தி வந்தனை முடித்துமதி தவழ்சோலை
மாவைநக ரத்தில் வந்து
பொய்யெனப் புகலுமுடல் பூமியில் புரளுறப்
புரிவலஞ்செய் தெழுந்து
புண்ணியமெய் யாலயத் துட்புகுந்த தன்போடு
போரானை வதனத்தனைப்
பூசைபுரி வித்தபின் னாசையொடு நின்கோயிற்
பொன்வாசல் முன்பு நின்று
கைகளைச் சிரமீது சேர்த்துநாக் குழறிடக்
கண்ணினீ ராறுபெருகக்
களிப்பினுட னாயிரத் தெட்டுநா மமுஞ்சொலிக்
கடம் பமலரினர்ச் சனைபுரிஇக்
கற்பூர வாராத்ரி கங்கண்டு கசியுமிரு
கண்ணுளார் தங்களுக்கிங்
கெவ்வகைப் போகமும் மிசைவுறச் செய்து நின்
னிணையடி யளிக்குநாத
வேழையேன் செய்த பிழை
யாதேனு முண்டாயின்னேபா றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவை நேயனே
யீசகுரு நாதகுகனே.

இப்பாடலைப் பாடியவர் மாவைக் குருமணி சுவாமி குமாசாமிக் குருக்கள் அவர்கள். இப்பெரியார் இப்பாட்டின் கடைசி அடியில் யான் செய்த பிழை யாதாயினும் உளதேல் அதனை மன்னித்தருளுக என்று வேண்டுகின்றார்.

சகல லோக குருவாக விளங்கிய சங்கரபகவத் பாதாள் முருகனைக் குறித்து சுப்பிரமணிய புஜங்கம் என்னும் நூலை ஆக்கியுள்ளார்கள். அந்த நூலில் ஒரு பாட்டு பின்வரும் கருத்தை விளக்குகின்றது.

தாயும் தந்தையும் மைந்தன் செய்யும் பிழையைப் பொறுப்பதில்லையா? சகல ஜீவராசிகளுக்கும் நீர் தந்தை. யான் உமது சிறு கைப்பிள்ளை. என் பிழையை மன்னிப்பது உமது கடமையாகும். சங்கரரின் இக்கருத்தையே பாட்டின் கடைசி அடியாகத் தொகுத்திருக்கிறார்.

கருணைக் கடலாகிய முருகனுக்கு மன்னிப்பதே கடமையாகும். பிறவி எடுத்துப் பிழை செய்வதே வாழும் மக்களுக்கு மன்னிப்புக் கேட்பது உரிமையாகும். இதனைத் தவிர வேறு எதனைக் கேட்பது? எதனைக் கொடுப்பது? இந்த உண்மைக் கருத்தை உள்ளத்தில் உணர்ந்து ஆசிரியர் ஏழையேன் செய்த பிழை என்ற அடியைக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

தொடர்ச்சி..........

நாத யோகியான நாரதருக்கு எப்போதுமே தம் பக்திச் சிறப்பில் பெருமை உண்டு. மெய்ம்மறந்து அவர் பகவானைப் பாடித் துதிக்கும் போது தெய்வமே சொக்கி நிற்கும். பரம பக்தர்களுள் நாரதரும் ஒருவர் என்ற புகழ் எங்கும் பரவி இருந்தது. நாரதருக்குத் தம் மாதிரித் தெய்வத்தைத் தியானம் செய்யும் பக்தன் எவ்வுலகத்திலும் கிடையாது என்ற கர்வம் தலைதூக்கியது. வாயாலும் உள்ளத்தாலும் பகவானைப் போற்றுவதே அவருக்குப் பொழுது போக்கு.

திருமாலுக்கு நாரதரின் கர்வத்தைக் குறைக்கவேண்டும் என்று தோன்றியது. ஒருநாள் நாரதரைப் பார்த்து பூவுலகில் ஒரு குடியானவன் இருக்கிறான். அவனிடத்தில் தேவலோக வாசிகள் கூட தியானயோகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று புகழ்ந்தார். நாரதருக்கு இது குத்தலாக இருந்தது. தமக்கும் சேர்த்துதான் இப்படிச் சொல்கிறாரோ என்று நாரதருக்கு நெஞ்சு குறுகுறுத்தது. சுவாமி! நான் அந்த பக்த சிரேஷ்டனைத் தரிசிக்க வேண்டும் என்று கேட்டார்.

திருமால் அந்த ஏழை உழவன் இருக்குமிடத்தைத் தெரிவித்தார். நாரதர் உடனே பூவுலகு வந்து சேர்ந்தார். மாறுவேடத்தில் நாரதர் ஒரு குக்கிராமத்தில் வசித்து வந்த குடியானவனின் குடிலுக்கு வந்து சேர்ந்தார். விருந்தாளியை வரவேற்று உபசரித்தான் உழவன். விடிகாலையில் எழுந்ததும் பகவானைத் துதித்தான் குடியானவன். பிறகு ஏர் பூட்டிக்கொண்டு உழுவதற்குப் புறப்பட்டான். பகல் முழுவதும் நிலத்தில் அயராது உழைத்தான். மாலை மயங்கியதும் வீடு திரும்பி குளித்துச் சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போனான். படுக்கையில் அமர்ந்த படியே பகவானைத் துதித்துவிட்டுப் படுத்தான்.

நாரதர் பார்த்தார் இதற்காகவா இவனைத் திருமால் இவ்வளவு பாராட்டினார்? என்று எண்ணினார். மறுநாளும் அங்கேயே தங்கி இருந்தார். உழவனின் செயல்முறை அப்படியேதான் இருந்தது. அலட்சிய பாவத்துடன் திருமாலிடம் வந்து சேர்ந்தார் நாரதர். சுவாமி! உங்களுடைய பக்தனைத் தரிசித்தேன். காலையில் ஒருதரம் உங்கள் நாமத்தை உச்சரிக்கிறான். இரவு படுக்கும் போது இரண்டாவது முறையாகத் துதி செய்கிறான். இவ்வளவுதான். இதற்காகவா நீங்கள் இவ்வளவு புகழ்ந்தீர்கள்? என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் விஷமச் சிரிப்புடன் சரி. நான் ஒன்று சொல்கிறேன். அதன்படி செய்யுங்கள், அதிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்வீர்கள். நான் அந்த உழவனைப் புகழ்ந்தது தக்கதா? இல்லையா? என்பது என்றார் சொல்லுங்கள், அப்படியே செய்கிறேன் நாரதர் பறந்தார்.

ஒரு குடம் நிறையத் தண்ணீர் நிரப்பிக் கொண்டு என் கோயில் ஒன்றை மூன்று முறை சுற்றி வரவேண்டும். ஒருதுளி நீர் கூடச் சிந்தக்கூடாது. பிறகு என்னை வந்து சந்தியுங்கள் என்றார். நாராயணனின் இக்கோரிக்கை நாரதருக்கு விசித்திரமாக இருந்தது. உற்சாகத்துடன் புறப்பட்டார். ஒரு திருகோயிலை நோக்கி.

தலையில் நீர்நிறைந்த குடம் இருந்தது. நாரதர் அடிமேல் அடிவைத்து நடந்தார். எங்காவது நீர் சிந்தி விடப் போகிறதே என்கிற கிலிதான் அவர் உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது. குடம், குடத்து நீர் - இதே நினைவுதான்.

நல்லகாலம், நாரதர் துளிநீர் கூடச் சிந்தாமல் வலம் வந்து சேர்ந்தார். விருப்புடன் விஷ்ணுவிடம் போய் நின்றார். இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்ற தோரணையில் பரந்தாமன் சிரித்துக்கொண்டே தண்ணீர் குடத்துடன் வரும் பொழுது என்னை எத்தனை தடவை தியானம் செய்தீர்? என்று கேட்டார்.

பெரியவரே! தங்கள் தலையில் இந்தச் சிறுபாரம் இருக்கப்போகிறதே, தங்களுக்கு வேறு நினைவு எழவில்லை. அந்த ஏழை உழவன் தலையில் பெரிய குடும்ப பாரமே அமுத்திருக்கிறபோது அவன் எப்படி எப்போதும் தெய்வ தியானம் செய்துகொண்டிருக்க முடியும்?

நாரதருக்கு நாணம் மேலிட்டது. அவர் செருக்கை முழுவதும் அகற்றும் அருள்வாக்கைப் பரனம் கூறினார். பக்த சிரேஷ்டரே! உண்மையான பக்தி சதா சர்வகாலமும் தியானம், கீர்த்தனம் என்று வழிபட்டுக்கொண்டிருப்பதால் மட்டும் ஏற்பட்டுவிடாது. அவைமூலம் மட்டும் பக்தி மேம்பட்டு விடாது. கடமையைச் செய்துகொண்டு குறித்த நேரத்தில் மனப்பூர்வமாகத் தியானம் செய்பவன் எந்தப் பக்த சிகாமணிக்கும் குறைந்தவனில்லை. உழவன் காலையிலும் இரவிலும் மட்டும் வாய்விட்டு என்னை வழிபட்டாலும் அவன் உழைக்கும் போதெல்லாம் என்னையே தியானம் செய்து கொண்டிருக்கிறான். நீங்களோ இந்த நீர்க்குடத்தைக் கொண்டுவரும் சிறிது நேரத்திற்குள்ளேயே என்னைத் தியானிக்க மறந்து விட்டீர்களே! தியான யோகத்தில் உழவனின் நிலைதான் தங்களுக்கும் வழிகாட்டி. உண்மைப் பக்தியும் அதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாருதப்புரவீகவல்லி அமைத்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

கனகசுந்தரி கலிங்கதேசத்து அரசனொருவனுடைய மகள். இவள் மூர்த்தி, தல, தீர்த்த யாத்திரை செய்வதில் விருப்பமுடையவள். அகத்திய முனிவர் வசிக்கும் பொதியமலைச் சாரலில் உள்ள தாமிரவர்ணித்துறைக்கு நீராடக் கனகசுந்தரி வந்திருந்தாள். அங்கு தவம் செய்துகொண்டிருந்த அயக்கிரீவ முனிவரைப் பார்த்து ஏழனமாகச் சிரித்தாள்.

சினம் கொண்ட முனிவர் "நீ அடுத்த பிறவியில் குன்ம வலியோடு அவலமான முகத்தையும் பெறுவாயாக." என்று சபித்தார். இப்பொழுது தன்னிலையை உணர்ந்த கனகசுந்தரி முனிவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி தன் பிழை பொறுக்க வேண்டினாள். மனமிரங்கிய முனிவர் "மகளே! கடற்கரைத் தீர்த்தம் ஆடுங்கால் கந்தப்பெருமான் திருவருளால் சாபவிமோசனம் கிடைக்கும்" என்று கூறித் தன்வழியே சென்றார்.

கனகசுந்தரி இறந்து அடுத்த பிறவியில் மதுரைப் பெருமன்னவன் உக்கிரப் பெருவழுதிக்கு மகளாகப் பிறந்தாள். அவள் அழகு மற்றையோரைக் கவரத் தக்கதாக இருந்தமையால் மாருதப்புரவீகவல்லி எனவும், அங்கசுந்தரி எனவும் அழைக்கப்பட்டாள். காலம்செல்ல முனிவரது சாபம் வேலை செய்யத் தொடங்கியது. படிப்படியே குன்மநோயும் குதிரை முகமும் பெற்றாள். உற்றார் உறவினர் மக்கள் எல்லோருமே அவளின் சுகத்திற்காகப் பிரார்த்தனை செய்தனர். ஒருமுறை பிரார்த்தனையின் போது "உனது மகள் நற்சுகம் பெற விரும்பினால் கடலிலும் ஆற்றிலும் சங்கமுகத் துறைகளிலும் நீராடுக" என்று ஓர் அசரீரி கேட்டது. தனது மகளுக்கு விடிவு காலம் வரப்போவதை நினைத்து அரசனும் மகிழ்ந்தான்.

அரசனும் தீர்த்த யாத்திரைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து முடித்தான். பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, தொண்டைநாடு ஆகிய நாடுகள் எல்லாம் தீர்த்தமாடி இறுதியில் சாந்தலிங்க முனிவரைத் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றாள். முனிவர் அவளுக்கு ஆசிகூறி இலங்கையின் வடபாலுள்ள நகுலேஸ்வரத்தையும் அங்கு வசிக்கும் நகுலமுனிவரையும் அங்குள்ள தீர்த்த விசேடத்தையும் அறிமுகம் செய்து வைத்தார். காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து புறப்பட்ட அங்கசுந்தரி கதிர்காமம் சென்று வணங்கி மாணிக்க கங்கையில் நீராடி வடதிசை நோக்கி வந்து நகுலேஸ்வரத்தை அடைந்து கீரிமலைச் சாரலில் வளவர் கோன் பள்ளம் என்னுமிடத்தில் பாளையம் அடித்திருந்தாள்.

நகுலமுனிவர் பல முனிவர்களுடன் சேர்ந்து தவம் செய்யும் இடம் அறிந்து அங்கு சென்று நகுல முனிவரையும் மற்றைய முனிவர்களையும் அடிபணிந்தாள். நகுலமுனிவர் தவம் செய்யும் வழியைக் கூறி அவளைத் தவத்தின் வழிப் படுத்தினார். முனிவர்களுடைய ஆசியினாலும் மாருதப்புரவீகவல்லியின் தபோ முயற்சியினாலும் பூரண சுகம் அடைந்தாள் மாருதப்புரவீகவல்லி. அவளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைமுகம் மாறப் பெற்றமையால் கோயில் கடவை என்ற பிரதேசம் மாவிட்டபுரம் என்ற பெயரைப் பெற்று விளங்கியது. (மா-குதிரை : விட்ட - நீங்கிய : புரம் - க்ஷேத்திரம்)

இந்தச் சம்பவத்தின் நினைவாக கோயிற் கடவை கந்தசுவாமி கோயிலைப் புதுப்பிக்க மனங்கொண்டாள் மாருதப்புரவீகவல்லி. ஆகம சாஸ்திரப் பிரகாரம் இக்கோயிலை அமைக்க முடிவு செய்து. அதற்கு வேண்டிய சிற்பாசாரியர்கள், சிவாச்சாரியர்கள், சேவகர்கள் இன்னும் மற்றும் வல்லுனர்களையும் திரவியம், பொன், பொருள் ஆகியவற்றையும் அனுப்பி வைக்கும்படி இளவரசி தன் தந்தைக்குத் திருமுகம் அனுப்பினாள்.

தன் மகளுடைய பூரண சுகம் அறிந்த பாண்டிய மன்னன் மிக விசேடமான முறையில் கோயில் அமைக்க எண்ணி எல்லாவித ஆயத்தங்களுடனும் காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்து அங்கிருந்து விக்கிரகங்கள் உட்படத் தேவையான சகலவற்றையும் அனுப்பிவைத்தார். மூலத்தானத்தில் இருந்து இன்றும் திருவருள் பொழிந்து கொண்டிருக்கும் முருகன், வள்ளி, தெய்வயானை விக்கிரகங்கள் கசாத்துறையை வந்தடைந்தன. முருகனுக்குக் காங்கேயன் என்றொரு பெயரும் உண்டு. காங்கேயனுடைய விக்கிரகங்கள் வந்திறங்கிய துறை ஆனபடியினால் கசாத்துறை காங்கேயன்துறை ஆயிற்று.

இக்காலப் பகுதியில் இலங்கையை அரசு செய்தவன் உக்கிரசிங்கசேனன் என்பவன். அவன் தனது இராச்சியத்தைச் சுற்றி வரும்போது மாருதப்புரவீக வல்லியின் தெய்வத் தொண்டையும் அவளையுங் கண்டு அவள் மீது காதல் கொண்டான். அரசியுடன் தான் பேச விரும்புவதாகத் தூதனுப்பினான். அவள் மறுத்து விட்டாள். அவள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது அவளைக் கவர்ந்து தானிருந்த பாளையத்திற்குக் கொண்டு சென்றான்.

இச்செயலை மிகவும் வன்மையாகக் கண்டித்த அரசகுமாரி கோயில் பணி நிறைவுற்றுக் கும்பாபிஷேகம் நடக்கும் வரை திருமணம் என்ற சொல்லுக்கே இடமில்லை என்று மறுத்துவிட்டாள். உக்கிரசிங்கசேனன் தானே முன்னின்று கோயில் திருப்பணியை முடித்து கும்பாபிஷேகமும் நடைபெற உதவியாயிருந்தான். அரசகுமாரி தந்தைக்கு அறிவித்து தந்தையின் பூரண சம்மதத்துடன் கதிர்காமத்தில் வைத்து இருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

ஆனிமாதம் உத்தர நட்சத்திரத்தன்று எல்லா மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இருபத்தைந்து நாள் மகோற்சவங்களும் நடைபெற்றன. அரசகுமாரி ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஈறாக உள்ள எல்லா உற்சவங்களையுந் தரிசித்து ஆலய நிர்வாகம் செவ்வனே நடைபெற்று வரவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவைத்துத் தீட்சிதரிடம் யாவற்றையும் பொறுப்பளித்து, அவரிடமும் நகுலமுனிவரிடமும் ஏனையோரிடமும் விடை பெற்றுக்கொண்டு முக்கிய பிரமுகர்கள் புடைசூழ உக்கிரசிங்கசேனனுடன் கதிரமலைக்கு ஏகினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனையின் அவசியமும் கடவுள் நம்பிக்கையும்

– காந்திஜி –

சொந்த முறையிலும் பொதுஜன ஊழியன் என்ற முறையிலும் நான் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வப்போது திடீர் திடீர் என்று ஏக்கம் பிடிக்கும். அப்போதெல்லாம் பிரார்த்தனை செய்வேன். எனது ஏக்கம் பறந்து போய்விடும். ஆனால் சத்தியத்தை நான் எவ்வளவு தூரம் எனது வாழ்க்கையில் கொண்டிருக்கிறேனோ, அவ்வளவு தூரம் நான் பிரார்த்தனை செய்வது ஓர் அவசியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

பிரார்த்தனை செய்யச் செய்ய கடவுள் பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை செய்வதில் ஓர் ஆசையும் ஆனந்தமும் ஏற்படத் தொடங்கிற்று. பிரார்த்தனை இல்லாத பொழுது உயிர்வாழ்வதே ரசமற்றுப் போயிற்று. உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வாறே ஆத்மாவுக்கு பிரார்த்தனை அவசியம். உடலுக்கு உணவைவிட ஆத்மாவுக்கு பிரார்த்தனை கட்டாயம் வேண்டுமென்று கூடச் சொல்லலாம். புத்தர், யேசுநாதர், முகமது நபி முதலிய பெரியோர் பிரார்த்தனையினால் தாம் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார்கள். பிரார்த்தனையின்றி உயிர்வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

இப்போது கோடிக்கணக்கான இந்துக்களும், முசல்மான்களும், கிறிஸ்தவர்களும் பிரார்த்தனை செய்தே கவலையை நீக்கிக் கொள்கிறார்கள். அவர்களைப் பொய்யர்கள் என்றும் ஏமாந்தவர்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் அந்தப் பொய்தான் எனது உயிருக்கு இன்றியமையாததாக இருக்கிறது. சத்திய உபாசகனான எனக்கு உயிர் போன்றுள்ள பிரார்த்தனை பொய்யாகுமா?

ராஜீய வானத்தில் ஏக்கமென்னும் மேகம் சூழும் போதும் எனது மனச் சமாதானத்தை நான் இழப்பதில்லை. எனது சமாதானத்தைக் கண்டு அநேகர் வியந்ததுண்டு. அந்த சமாதானம் எங்கிருந்து வருகிறது? பிரார்த்தனையில் இருந்துதான். நான் படித்தவனல்ல. நான் வெறும் பிரார்த்தனைக்காரன் என்று தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன். அவரவர் மனோதர்மப்படி பிரார்த்தனை நடத்தலாம் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது முன்னோர்கள் நடந்து சென்ற பழைய பாதையில் நாமும் செல்வது சுலபமெனத் தோன்றுகிறது.

கடவுளிடத்தில் நம்பிக்கை தோன்றுமாறு பிறருக்குப் போதனை செய்ய நானறியேன். சிலவற்றைக் கண்கூடாகக் காட்ட முடியும். சில தானே விளக்கமாகும். சிலவற்றை ஒருபோதும் காட்டமுடியாது. க்ஷேத்திர கணித சாஸ்திரத்தில் அடிப்படையான அம்சங்கள் சிலவுண்டு. அதேபோலக் கடவுளின் சத்தியம் அடிப்படையான ஓர் உண்மை. மனித இதயத்தின் சக்தியைக் கொண்டு அவரை அறிய முடியாமலிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் ஆண்டவனை அறிவதைப் பற்றிப் பேசவே இடமில்லை. எங்கும் உறையும் இறைவனை உணருவதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம் கொடுப்பது எவ்வளவு முடியாதோ, அம்மாதிரியே அறிவினாலும் ஆண்டவனை அளக்க முடியாது. ஏனெனில் அவர் காரணங்களையும் காரியங்களையும் கடந்தவர்.

கடவுள் உண்டு என்று மெய்ப்பிக்க ஏதேதோ சொல்லப்படுகின்றன. ஆனால் ஒரு சிறு குழந்தை எவ்வாறு தாயினிடம் நடந்து கொள்ளுமோ, அதே மாதிரி பகவானிடத்தில் திட நம்பிக்கையோடு நான் வாழ்கிறேன். நானிருப்பது உண்மையானால் என்னைப் படைத்த பகவானும் இருக்கிறார் என்பது உறுதி. உலகில் கோடிக்கணக்கானவர்களுக்கு இதே மாதிரி உறுதியுண்டு. பகவானை வர்ணிக்கவோ, அவரது அனந்த கல்யாண குணங்களை விவரிக்கவோ எல்லோராலும் முடியாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் பகவத் பக்தி அதில் ஊடுருவி ஓடுவதை ஒவ்வொரு செய்கையிலும் காணலாம்.

நம்முடைய நம்பிக்கையை மூடியிருக்கும் மாயையைத் தொலைக்க வேண்டும். அதாவது நமக்கு ஆண்டவனிடத்தில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால், நாம் இதுவரை உலகில் படித்துள்ள படிப்புக்களை மறந்துவிட வேண்டும். அவை நமது அறிவை மயக்கி வழிதெரியாத இடத்தில் கொண்டு போயிருக்கின்றன. இப்போதைய படிப்பை மறந்தால் நமக்கு வழி தானே புலனாகும். மெய்யடக்கத்தோடும் நமக்கு ஒன்றுந் தெரியாது என்ற எண்ணத்தோடும் ஒரு நம்பிக்கையோடும் நாம் நடக்கத் தொடங்கவேண்டும்.

அகண்டமான இந்த அண்ட கோசத்தில் மனிதப் பிறவி எடுத்த நாம் அணுவினும் மேலாக வாழ்ந்து வருகிறோமல்லவா? அணுவாவது அதற்கிடைப் பட்டுள்ள சட்டப்படி நடக்கும். நாம் இயற்கையை எதிர்ப்பவர்களாதலால் இன்னும் கேவலமானவர்களாக வாழ்கின்றோம். ஆனால் நம்பிக்கை இழந்தவர்களுக்கு நான் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

கடவுளை நம்புவோர் பிரார்த்தனை செய்யவேண்டும். பிரார்த்தனை அத்தியாவசியம். அவ்வப்போது நாம் பகவத் பக்தியை அதிகமாக்கிக் கொள்வதற்காகவே குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட விதத்தில் பெரியோர் பிரார்த்தனையினால் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதி கூறுகிறேன்.

*(இது மகாத்மா காந்திஜியின் கட்டுரை மொழிபெயர்ப்பு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சைவத்தமிழ் பண்பாட்டுக் கேந்திரம்

பேராசிரியர் ப.சந்திரசேகரம்
*(கல்வித் துறைத் தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்)*

சைவ மரபுக்கும் தமிழ் மொழிக்கும் கல்வி இயலுக்கும் தொன்று தொட்டு மிக மிக நெருங்கிய இணக்கம் வளர்ந்து வந்துள்ளது. இதுவே தமிழர் பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் கிடைத்த தனிச்சிறப்பு. மக்கள் இன்பமானவற்றையும் இனியவற்றையும் நாடுவதால் அழகியல்கலைகள் தோன்றுகின்றன. இக்கலைகள் அனைத்துக்கும் சமய இயல்கலை உயிரூட்டுகின்றது. சைவ உலகில் சமயக்கலையானது அன்பு நெறியாகவே வளர்ந்து வந்துள்ளது.

ஆன்ம தத்துவ ஆராய்ச்சியானது ஓர் அறிவியற்கலை. சைவ மக்களின் மெய்யியற் கலையின் உச்சமான வளர்ச்சியே அழகிய தத்துவமான சைவசித்தாந்த நெறி. தமிழ் மக்களின் பரம்பரைச் சொத்தாகிய இந்தச் சைவ சித்தாந்த நெறி மரபு, அழகியல், அன்புநெறி, அறிவியல், மெய்யியல், ஆய்வுநோக்கு ஆகியவற்றை போற்றி வளர்த்த மரபாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 75 ஆண்டுகளுக்கு முன் ஒரு விருப்பத்தை வெளியிட்டார். அதாவது பூலோக சாஸ்திரம், வானசாஸ்திரம், உலக சாஸ்திரம் போன்ற பல வகைச் சாத்திரங்களையும் தமிழில் கற்பிக்க வலியுறுத்தினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இதைப் பேணவேண்டும். யாழ்.பல்கலைக்கழகம் தமிழ்மக்களின் அறிவு பண்பாட்டுக் கலாச்சார கேந்திரம் என்பதை தமிழ்மக்கள் அனைவரும் மனதில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர் சமுதாயம் கல்வியை உயிர்மூச்சாகக் கொண்டது. இங்கு நிறையத் தமிழ்ப் பாரம்பரியம் உண்டு. மனிதனைக் கல்விவயப்படுத்துவது மிக மிக மேலான உயர் பணியாகும். ஆன்மீக விடுதலைக்கு கல்வி ஒரு நல்ல ஆயுதம். அனைவரும் இதனை உணர்ந்து பண்பாடு பிறழாத கல்வியைப் பேணவேண்டும்.

*(யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைக் காண்பது எங்கே?

"அகர வுயிர் போலறிவாகி யெங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து" - திருவருட்பயன்

எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கும் இறைவன் எத்தகையவன், எங்குள்ளான் என்று சுட்டிக் காண்பது இயலாது. விறகில் தீ போல், பாலில் நெய் போல் எங்கும் நிறைந்துள்ள சோதி சொருபத்தை அவன் படைப்பில் அவனருட் செயலில் அறிந்து இன்புறலாம்.

இறைவன் இப்படிப்பட்டவரென்றெவராலும் எடுத்தியம்ப முடியாது. ஆண்டவன் ஆதியுமந்தமுமற்றவர். ஆனந்த சொரூபி, முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளானவர். பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப்பெற்றியினர். அன்னார் தம் பெருமை அளவிடற்கரியது. அவர் எங்கும் நிறைந்தவர். ஏகமானவர். எல்லாம் வல்லவர். அவனன்றி அவனியில் அணுவும் அசையாது; என்றுமெங்களை யாட்கொள்ளுஞ் சித்தமுடையவர். நித்தியமான தந்தையுமவரே, தாயுமவரே, நித்தியானந்தம் தரவல்லவருமவரே. இப்பூவுலகிற்கு எங்களை அனுப்பியவரும் ஆண்டவரே. எங்களுக்கான பெற்றோர் உற்றோர் மற்றுஞ் சுற்றத்தோராய் துணைகளைத் தந்தார். எல்லார்க்குந் தேவையான உண்டியும் உடையும் உறையுந் தந்து காத்தருளுகின்றார். தாயிற் சிறந்த தயவான தத்துவனின் தண்ணளி மிகுந்த திருப்பார்வையில் நாமனைவரும் சகோதரரே, சகோதரர்களே எங்களெல்லோருக்கும் ஏகமான பரமபிதா யாரெனக் காண்கின்றோமோ அவரே இறைவன்.

இறைவனின் அற்புதத்தையும் அழகையும் இயற்கையிற் கண்டு ஆனந்திப்போம். கடவுள் தன் கருணையுள்ளத்தையும் மட்டற்ற மாட்சியினையும் இயற்கையிலேயே காணச் செய்கிறார். பல வேளைகளிலும் நாங்கள் கண்ணிருந்து மில்லாதார் போல் கண்டு களிக்கின்றோமில்லை. இயற்கை வனப்பை இனிது நோக்கியுள்ளத்தால் உணர்வோன் ஆண்டவன் தன் அற்புதத்தை யறிந்தோனாவன். காட்டினிற் பூவையும், முட்டையுட் குஞ்சையும் காத்திடும் கருணை வள்ளலின் பெருமையினைக் காண்போன். வீட்டினை மறந்து ஊனிலும் உடையிலும் நாட்டஞ் செலுத்துவன் கொல்லோ? கண்ணிமை திறவாத் தன் சிறுகுட்டியைத் தூக்கிச் சென்றிடும் பூனையைப் பாருங்கள். தாய்ப்பூனை தானே வந்து தன் வாயாற்றூக்கிக்கொண்டு செல்கின்றது. குட்டியோ யாதொரு செயலுமின்றி மியா மியா என்று மாத்திரங் கத்துகின்றது. இதுபோல நாமும் ஈசனை நோக்கிப் பிரார்த்தனை செய்தாற் போதும். எமது வல்லமையால் எச்செயலுமாகுமென்று பிரயத்தனப்படவேண்டாம். இறைவன் தானே வந்து சேமமுற வழி நடத்துவார். கழுகு தன் குஞ்சுகளைப் பறக்கப் பயிற்றுவதை நோக்குங்கள். சிறகு வளராத சிறு பறவையை உயரமான மரத்திலிருக்கும் பொந்திலிருந்து தள்ளி விடுகின்றது. குஞ்சின் மீதுள்ள கோபத்தினாலா? இல்லையில்லை. தன்குஞ்சு பறக்கவேண்டும் என்ற ஆசையினாலேயே. இதனையுணர்ந்து நோக்குங்கால் நமக்கேற்படும் சோதனைகளால் அமைதியைக் கைவிடுவோமா? இல்லை. இயற்கையின் சிருஷ்டிப்பே அற்புதமானது. கண்ணிருந்தும் கதிரவனின்றேற் பயன் யாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமில்லை. அஃதுபோல் எத்தகைய செல்வங்களுஞ் சிறப்புமிருந்தும் இறைவனைக் காணோமாயின் என்ன கதியடைகுவோம்? அருக்கனற்ற இருளிலே இன்னலுறுவான் போற் தத்தளிப்போமன்றோ? என்ன அற்புதம். ஏகமான பராபரனுக்கெடுத்துக் காட்டாக இலங்கும் பரிதியுமேகமாயிற்றே. இதனாற் போலும் ஆன்றோர் ஆதித்தனை வழிபட்டனர்.

இறைவனின் இணையில் பெருமைகளை இயற்கையிற் காண்கின்றோம். ஆயின் அவரினினோசையைக் கேட்கின்றோமில்லையே. இறைவனோடு பேசுவதெப்படி? இயற்கையோடு பேசுவதெப்படி முடியுமா? இவைபோன்ற வினாக்கள் எமதுள்ளத்திலும் கூடும். எங்கும் நிறை ஏககர்த்தாவுக்கு எறும்பின்கால் சறுக்குவது தானும் கேட்கின்றது. நாம் வாய்விட்டு பேச வேண்டியதில்லை. நாம் சிந்திப்பதைத் தானு மவர் அறிகின்றார். இறைவன் எமது பேச்சைக் கேட்பதோடு மாத்திரம் திருப்தியடைந்திலர். தானும் எம்முடன் பேச விரும்புகின்றார். எம்மோடு பேசுகின்றார். ஆனால் நாம் பல முறையும் பரம்பொருளின் ஓசையைத் தடுக்கின்றோம். ஒவ்வொருவருள்ளத்திலேயும் ஈசன் அமர்ந்திருக்கின்றார். அஞ்ஞானத்தை அகற்றி ஞானக்கண்ணால் உற்றுநோக்கின் அகத்தினில் அவரைக் காண்போம். ஏகாந்தமான இடத்தில் அமைதியாக இருந்து அவர் செய்கின்ற நன்மைகளுக்காக எமது துதியைச் செலுத்துவோம். அவர் பெருமைகளையும் மகிமைகளையும் சிந்தித்த எங்களை அவருக்கே அர்ப்பணஞ் செய்வோம். அப்போது ஆண்டவனின் இனிய மென்மையான, நன்மையான மகிமையான பேச்சினை எங்கள் செவிகள் கேட்கும். அவரின் அற்புதமான காட்சியைக் காண்போம். இறைவனோடு வாழ்ந்து அவன் சித்தப்படி நடப்பதே மேலான இன்பத்தையளிக்கும். அதுவே சலனமற்ற சாந்தமான வாழ்க்கையாகும்.

நாங்கள் செய்யுமொவ்வொரு சிறு காரியங்களையும் எங்கள் உள்ளத்தின் ஒவ்வொரு சிந்தனைகளையுமெங்கள் நித்திய பிதா அறிகின்றார். நாங்கள் அவரின் உண்மைப் புத்திரர்களாக நடத்தல் வேண்டும். இறைவன் எங்கள் எசமான், நாமவரது ஊழியக்காரர் என்று உணர்வோமாக. அவர் காட்டும் பாதையே எம் பாதையாகட்டும். அவரைச் சேர்வதே எமது வாஞ்சையாகட்டும். எல்லாம் அவராய இறைவனுக்குள்ளே நாம் சீவிக்கவும் அவரை உள்ளத்திலே காணவும் அருள் புரிவாராக!

**"எல்லா உலகமுமானாய் நீயே ஏகம்பமேவியிருந்தாய் நீயே**
**நல்லாரை நன்மையறிவாய் நீயே ஞானச்சுடர்விளக்காய் நின்றாய் நீயே**
**பொல்லா வினைகளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே**
**செல்வாய செல்வந்தருவாய் நீயே திருவையாறகலாச் செம்பொற் சோதி"**

**"என்பாதை வேண்டாமே உம்பாதை காட்டிடும்**
**தேவா உம் கரத்தால் நீர் என்னை நடத்தும்**

**நீர் காட்டும் பாதையே எவ்வாறு முத்தமம்**
**நேர் சுற்று ஆயினும் நடத்தும் விண் ஸ்தலம்**

**என் சித்தம் ஆபத்தாம் உம் சித்தம் நாடுவேன்**
**நான் செல்லும் பாதையே நீர் காட்டக் கெஞ்சுவேன்**

**நான் தேடும் ராஜ்யம் உம் சொந்தமானதே**
**அங்கென்னைச் சேர்த்திடும் பாதையும் உம்மதே."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! திராட்சைப் பழங்களே...

திராட்சைப்பழம் நரிக்குப் புளித்த கதை எல்லோரும் அறிவீர்கள். இந்த நரி வாழ்ந்த வெகு காலத்திற்குப் பின் வாழ்ந்த நரி ஒன்று ஒருநாள் பசியால் காடு எங்கும் அலைந்து திரிந்தது. காட்டில் உணவுக்காக அலையாத இடமே இல்லை. காட்டில் காகம் தானும் பறக்கவில்லை. காகம் இல்லாத ஊர் கிடைக்காதே என்று சொல்வார்களே. காகம் இல்லாத காடு இருக்கிறது என்பதை நான் ஒருவன்தான் அறிவேன் என்று நரி தனக்குள் சொல்லிக்கொண்டது. காகம் இருந்தால் வடையோடுதான் இருக்கும். எப்படியும் அதனை ஏமாற்றி அந்த வடையைச் சாப்பிட்டுப் பசியைச் சிறிதாவது தணித்துக் கொள்ளலாம் என நரி மனப்பால் குடித்தது.

இப்படி யோசித்து யோசித்து நடந்து கொண்டே ஒரு தோட்டத்தை வந்து அடைந்தது நரி. திராட்சைப் பழத்தோட்டம் ஒன்றில் பழங்கள் குலை குலையாகத் தொங்கின. நரிக்கு எட்டத்தக்க தூரத்திலேயே தொங்கின. பழங்கள் வழு வழு என்று மொழு மொழு என்றிருந்தன. பார்த்த உடனேயே நாக்கில் நீர் ஊறிற்று. அப்படியே பார்த்துக்கொண்டு நீண்ட நேரம் நின்று விட்டது. காரணம் தோட்டக்காரன் ஈதானும் நுழையாதவாறு சுற்றிவர வேலி அடைத்திருந்தான். நாவில் நீர் ஒழுக ஒழுக அந்த வேலியைச் சுற்றிச் சுற்றிப் பலமுறை நடந்து முடித்துவிட்டது நரி. நரிக்கு ஒன்றுமே புலப்படவில்லை. பழத்தின் அழகோ நரியை அங்கிருந்து போகாமல் செய்து விட்டது. எண்ண முடியாத அளவுக்கு தோட்டத்தை வலம் வந்துவிட்டது. நரி பலமுறை சுற்றி வந்த பின் வேலியில் ஒரு சிறு துவாரம் இருப்பதைக் கண்டது.

அத்துவாரத்தின் ஊடே மெதுவாகத் தலையை நுழைத்து கழுத்தளவில் சென்று விட்டது. உடல் செல்ல மறுத்து விட்டது. நரி அப்படியே படுத்து விட்டது. திராட்சைப் பழக்குலைகளை இப்போது அழகொழுகப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்துவிட்டதில் மனதிற்கு ஒரு திருப்தி. இப்படிப் படுத்துக் கிடக்கும் போதே நரிக்கு ஒரு யோசனை பிறந்தது. இப்படியே சில நாட்களுக்குப் பட்டினி கிடந்தால் உடம்பு மெலிந்து விடும். உடம்பு மெலிந்து விட்டால் உள்ளே செல்லலாம். உள்ளே சென்றுவிட்டால் வேண்டிய அளவு திராட்சைப் பழத்தைக் குலை குலையாகத் தின்னலாம் என்று திட்டமிட்டது.

நரி மூன்று நாட்கள் இராப்பகலாக ஆடாமல் அசையாமல் கிடந்தது. உடல் முன்பே பட்டினியால் சிறிது மெலிந்து இருந்தது. இப்போது நன்றாக மெலிந்து விட்டது. சிறிது சிரமத்துடன் உள்ளே புகுந்து விட்டது. மிகப்பெரிய ஆவலோடு வேண்டு மட்டும் பழங்களைத் தின்றது. தன்னுடைய உபாயம் பலித்ததையிட்டு நரிக்குப் பெருமகிழ்ச்சி. ஒரு மாசத்திற்கு உணவே தேவையில்லை என்ற அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி மகிழ்ச்சியுடன் படுத்துக் கிடந்தது. ஏதோ சலசலப்புக் கேட்டது. தூரத்திலே நாய் ஒன்று குரைக்கும் சத்தமும் கேட்டது. நரிக்குப் பயம் தொட்டு விட்டது. தோட்டத்தை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்று எண்ணம் கொண்டது. ஓடிச்சென்று முன்னர் உட்புகுந்த துவாரத்தில் தலையை நுழைத்தது. கழுத்தளவிலே தான் சென்றது. உடல் செல்ல மறுத்துவிட்டது. மறுபடியும் தலை தோட்டத்திற்கு வெளியேயும் உடல் தோட்டத்திற்கு உள்ளேயும் இருக்கத்தக்கதாக நரி படுத்துவிட்டது.

நரி ஆழ்ந்த யோசனை செய்தது. மறுபடியும் மெலிந்தாலே தவிர வெளியே செல்ல மார்க்கமில்லை என்பதைக் கண்டது. இந்த நேரத்தில் தோட்டக்காரன் வந்தால் என்கதி என்ன என்று சிந்தித்தது. பயத்தினால் உடல் நடுக்கம் எடுத்தது. அந்த நடுக்கத்தில் உடல் கெதியாகவே மெலிவடையத் தொடங்கி விட்டது. திராட்சைப் பழத்தைத் திரும்பிப் பார்க்கவே அஞ்சியது. மூன்று நாட்கள் மிகப் பயத்துடன் கழிந்தன. உடலும் நன்றாக மெலிவடைந்து விட்டது. தள்ளாடிக் கொண்டே நரி ஒருவாறு வெளியேறியது. இப்போது பயம் தீர்ந்து விட்டது. திராட்சைத் தோட்டத்தைத் திரும்பிப் பார்த்தது. பழங்கள் குலை குலையாகத் தொங்கியபடி வழு வழு என்று மொழு மொழு என்று காட்சி அளித்தன. நரி தான் பட்ட அநுபவத்தை எண்ணிப் பார்த்தது. தோட்டத்தைப் பார்த்து பின்வருமாறு பேசியது:

"ஏ, தோட்டமே! உனது அழகை என்ன என்று சொல்வது? உனது பழங்களின் ருசியை எப்படி வருணிப்பது? ஆனால் உன்னால் யான் என்ன பயனை அடைந்தேன்? நான் பட்டபாட்டிற்கும் செய்த சூழ்ச்சிக்கும் பதிலாக இப்போது நான் பெற்றுள்ள பலன் ஒன்றையும் காணேன்!" என்று ஏக்கத்துடன் உரைத்தது.

மக்களின் நிலையும் இதுவேதான். பிறக்கும் பொழுது வெறும் உடலோடு பிறக்கின்றோம். இறக்கும் போதும் வெறும் உடலோடு தான் இறத்தல் வேண்டும். நாம் இங்கே பட்ட பாட்டிற்கெல்லாம் பலனாக ஒன்றையாவது நாம் இறக்கும் போது கையில் எடுத்துச் செல்ல முடியாது போகிறது.

"காதற்ற ஊசியும் வாராது காணுன் கடைவழிக்கே" என்பது உண்மை. ஆனாலும் நாம் நம்முடன் எடுத்துச் செல்லும் பொருள் ஒன்று மட்டும் உண்டு. அது யாதெனில் யாம் செய்த செயல்களின் பயனே. நம்மைச் சேர்ந்த எல்லாம் சுடுகாடு மட்டுந்தான் என்பது வெளிப்படை.

அத்தமும் வாழ்வு மகத்து மட்டே! விழியும் பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே!
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே!!

என்ற பட்டினத்தடிகளின் பாடலைப் பன்முறை சிந்தித்துப் பார்ப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய இசைவினை நோக்கி

பகவான் பாபாவின் மையக் கருத்தினைப் புரிந்து கொள்வதற்கான முக்கியமான முதல் அடிப்படைத் தத்துவம் சமயங்கள் ஒன்றுக்கொன்று விரோதமானவை அல்ல; அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதாகும். எல்லாச் சமயங்களும் ஒரே தெய்வீக மூலகத்திலிருந்து வெளிவந்தவை. வெளிப்படுத்தும் வகையில் அவற்றின் தூயதன்மை வேறுபடுகின்றது. யார் மூலமாக அவை கூறப்படுகின்றனவோ அவரது திறமைக்குத் தகுந்தவாறும் அவை வேறுபடுகின்றன என்பதாகும்.

எனக்குத் தெரிந்தவரை இரண்டாவது அடிப்படைத்தத்துவம் சமயங்கள் அனைத்தும் மனிதனையும் அவன் வாழ்க்கையில் எதிரிடுகின்ற பிரச்சினை களையும் பற்றியவை என்பதும், அந்தப் பிரச்சினைகளுக்கு அவன் சரியான விடைகள் தேடவேண்டும் என்பதுமாகும். இனம், கோட்பாடு, நிறம், பால், நாடு, வாழும்முறை, பிரச்சினைகளைச் சமாளிக்கும் முறை ஆகிய இவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும், அனைத்து மனிதரின் இலட்சிய முடிவு ஒன்றேயாகும். ஆகவே சமயங்கள் தமது அடிப்படைத் தன்மையில் வித்தியாசமாக இருக்க இயலாது.

இந்தப் பின்னணியில் பகவான் பாபாவின் அவதாரத் தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உலகிலுள்ள எல்லாச் சமய அமைப்புக்களும் இந்த அடிப்படை உண்மையை அறிந்து கொண்டதற்கு இலக்கணமாக அவர் திகழ்கின்றார். அந்த அடிப்படை உண்மை தற்கால விஞ்ஞானிகளாலும் கண்டு கொள்ளப்பட்டது. ஜஸன் பார் கூறியவாறு:

நமது விருப்பங்களால் பாதிக்கப்படாத ஓர் உயர் சக்தி உள்ளது. அதுவே கடைசியில் முடிவெடுத்து தீர்மானிக்கிறது. அந்த மைய ஆற்றலுக்குப் பல்வேறு காலங்களில் பல்வேறு பெயர்களிட்டு மக்கள் அழைத்து வந்தனர். அதனை ஆத்மா அல்லது கடவுள் என்று கூறினர். இன்றுங்கூட இந்த மையத்தை அடைய எத்தனையோ வழிகள் உண்டு. விஞ்ஞானம் அவற்றில் ஒன்றாகும்.

இந்துக்களின் அவதாரம் என்ற கருத்துக்கு அளவற்ற பொருளும் முக்கியத்துவமும் உள்ளன. உயர்சக்தி என்று ஜஸன் பார்க் கூறுவதை அது குறிக்கிறது. நமக்கு நிரந்தர விடுதலைக்கான நேரான வழியைக் காண்பிப்பதற்கும் சுயநலத்திலிருந்து பரநலத்துக்கும் இருமைத் தன்மையிலிருந்து ஒருமைத் தன்மைக்கும், மனிதத் தன்மையிலிருந்து தெய்வீகத் தன்மைக்கும் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியைக் காண்பிப்பதற்கும் இறைவன் மானிட உருக்கொண்டு இறங்கி வரும் மிகவும் அபூர்வமான சம்பவத்தை அது குறிக்கிறது. பகவான் பாபாவே நமக்கு வழியும், இலட்சியமும், வழிமுறையும் ஆவார். பிரேமையை தமது உருவம் என்று பாபா கூறுகிறார். காலங்கடந்த ஞானத்தின் திருவுருவமும் அவரே ஆவார். அவர் மேலும் கூறியதாவது:

மிக உயர்ந்த ஆனந்தத்தை மிக உயர்ந்த பிரேமையின் மூலம் அடைதல். இதுவே வேதாந்தத்தின் (ஞானத்தின் அந்தம்) உபதேசம். இதற்கு மாறாக வேதாந்தத்தின் தத்துவக் கோட்பாடு தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

அது ஆழ்ந்த கருத்துள்ள புத்தகங்களைப் படிப்பதல்ல, மூக்கின் வழியாகக் குறிப்பிட்ட அளவில் காற்றினை உட்செலுத்தி வெளியே அனுப்புவதல்ல. தங்குவதற்கு இடமில்லாமல் வாழ்வதல்ல. வருவாய் இல்லாமல் வாழ்வதுமல்ல. நேர்மையான வாழ்க்கை, சமய நிலையுடைய வாழ்க்கை, உண்மையான வாழ்க்கையே வேதாந்தத்தின் விதிமுறை. வேதாந்தத்தின் அழகு வெளியர்களாலும் போலி விரிவுரையாளர்களாலும் அலங்கோலப்படுத்தப்பட்டது. வேதாந்தத்தின் கொள்கைகளுக்கு அவர்கள் பல்வேறு பொருள் நாடினர். அதன் பயனாகத் தவறான பொருள் பல கொண்டு, சிக்கலில் தவித்தனர். தெளிவு இருந்த இடத்தில் குழப்பத்தை உருவாக்கினர்.

# இதய அஞ்சலி

*அறிவுச்செல்வத்தை உலகிற்கு வழங்கிக்கொண்டிருந்தவர்*

**மங்கயர்க்கரசி சிற்றம்பலம்**

இந்து மதம் விஞ்ஞானம்
இன்பமுறும் மங்கயர்க்கரசியே
பைந்தமிழில் வழங்கிய
பல்கலைகள் தினந்தோறும்
வந்தனங்கள் வாய்மையிலே
வளர்த்திடும் அரசியோ
அர்த்தமிலாப் பரமபதம்
அடைந்திட்டீர் அவனியிலே

**ஆத்மஜோதி மணிமண்டப சபையினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமதாச தரிசனம்

### சுவாமி ராமதாசர் ஒரு மகாஞானி

இவருடைய தந்தையே இவருக்கும் குருவாக விளங்கினார். தந்தையிடம் உபதேசமாகப் பெற்றுக்கொண்ட மந்திரம்.

"ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்" என்பதாகும். அதன் துணைகொண்டு இந்தியா முழுவதும் சுற்றினார். எல்லாம் ராமனிச்சை என்றே ராமனிடம் தன்னை முற்றாக ஒப்புக் கொடுத்து வாழ்ந்தார்.

ஒருமுறை இவரும் இவரது சீடரும் புகையிரதத்திற் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். ஒரு புகையிரத ஸ்தானத்தில் இரண்டுநகர் காவலர்கள் ஏறினார்கள். தாம் இருப்பதற்கு இடம் இருக்கிறதா என்று பார்த்தனர். இவர்கள் இருவரையும் கண்டனர். ரிக்கெற் என்று கேட்டனர், இருவரும் எழுந்து நின்றனர். சாதுக்கள் எவரும் இந்தியாவில் புகையிரதத்தில் பிரயாணம் செய்வதற்கு உத்தரவுச் சீட்டுப் பெறும் வழக்கம் இல்லை; அதனால் தான் நகர்காவலர் இருவரும் ரிக்கெற் என்று கேட்டனர். இது எல்லோருக்குமே தெரியும்.

எழுந்து நின்ற இருவரையும் கீழே இருக்கச் செய்த நகர்காவலர் இருவரும் இவர்கள் இருந்த இடத்தில் தாங்கள் அமர்ந்து கொண்டனர். அமர்ந்ததும் தாங்கள் அணிந்திருந்த தொப்பிகள் இரண்டையும் கழற்றி இவர்களிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்திருங்கள் என்று கூறி அவர்கள் இருவரும் நன்றாகத் தூங்கி விட்டனர். இராமதாசருடன் கூட வந்தவருக்குப் பெரிய கோபம். இப்படிச் செய்யலாமா என்று பொரிந்து தள்ளினார். இராமதாசர் கூறினார், இராமன் எங்களுக்குச் சுகத்தைத் தந்தார். நாங்கள் அந்தச் சுகத்தில் இராமனை மறந்து விட்டோம். ராம ஜெபம் செய்யுமாறு எங்களுக்கு இத்தண்டனையைக் கொடுத்துள்ளான் என்று. கோபம் ஆறி இருவருமே ராமநாம ஜெபம் செய்தனர். இவர்களுடைய ஜெபத்தின் வலிமை போலும் நகர்காவலர் இருவரும் எழுந்து இருவரிடமும் மன்னிப்புக்கோரி அந்த இடத்தில் இருக்கச் செய்தனர்.

இவர் இந்தியா முழுவதும் செய்த யாத்திரையை "அருள் நாடிய யாத்திரை" என்ற பெயரால் ஒரு புத்தகம் எழுதினார். அதை வாசிக்கும் போதே நாமும் அந்தத் தலங்களில் இருப்பது போன்றே ஓர் உணர்வு ஏற்பட்டது.

யாத்திரை முடிந்ததும் மங்களூரைச் சேர்ந்த கஞ்சன்காடு சென்றார். அங்கே ஆனந்தாச்சிரமம் என்ற பெயரோடு ஓர் ஆச்சிரமம் அமைத்தார். அங்கு அன்னை கிருஷ்ணாபாய் சுவாமிக்குச் சிஷ்யையாக வந்து வாய்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணாபாய் இரண்டு குழந்தைகளின் பின் கணவனை இழந்த விதவை. கணவனை இழந்தபின் இல்லறத்தில் இருக்க விரும்பவில்லை. ஆத்ம ஞானத்தைத் தேடி சுவாமிகளை வந்து அடைந்தார். குழந்தைகள் இருவரையும் வளர்க்கும் பொறுப்பை இவருடைய கணவனாரின் தமையனார் ஏற்றுக்கொண்டார். அன்னை கிருஷ்ணாபாய் இருபது வயதிலேயே சுவாமிகளைக் குருவாகக் கொண்டார்.

சில நாட்கள் பகல் முழுவதும் சுவாமிகளுடன் இருந்து இரவு வீட்டுக்குச் சென்று விடுவார். காலகதியில் தனது குருநாதருக்கு முழுநேரத் தொண்டு செய்ய மனம் கொண்டார். முழுநேரமும் ஆச்சிரமத்திலேயே தங்கிவிட்டார். சுவாமி களுடைய தவத்திற்கு உறுதுணையாக இருந்து வந்தார். ஓர் இளம் பெண் ஆச்சிரமத்தில் இருப்பது சில தூர்த்தர்களுக்கு மனம் கொள்ளவில்லை. அன்னையார் தியானத்தில் இருக்கும் போது அவரை அப்படியே தூக்கினார்கள். “ராமா” என்றார் அம்மையார். அப்படியே அம்மையாரைப் போட்டுவிட்டு ஓட்டம் எடுத்தார்கள்.

இன்னொரு முறை சில கள்வர்கள் ஆச்சிரமத்தில் நிறையப் பணம் இருக்கும் என்று நினைத்துக் கொள்ளையடிக்க வந்திருந்தார்கள். இவர்களைக் கண்டதும் சுவாமியும் அன்னையும் அவர்களுடைய தொழிலுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்று வெளியே வந்து விட்டார்கள். வந்தவர்கள் ஆச்சிரமம் முழுவதும் தேடியும் ஒரு செம்புச் சல்லியும் கிடைக்காது போகவே வெறுங்கையோடு திரும்பினார் கள். இச்செயல்களின் பின் பல பக்தர்கள் அங்கு வரத் தொடங்கினார்கள். பக்தர்கள் வந்ததால் அவர்கள் தங்குவதற்குப் பல அறைகள் கட்டப்பட்டன. ஆச்சிரமம் விஸ்தரிக்கப்பட்டது. தியான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. சுவாமிகள் அதில் எந்த நேரமும் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டே இருப்பார்.

விடுமுறைக் காலங்களிற் பலர் இங்கு வந்து தங்கித் தியான சாதனைகள் பழகிச் செல்வர். காலை மாலை ஒவ்வொரு மணித்தியாலம் தவறாது ராமநாம பஜனை நடைபெறும். சுவாமிகளுடன் ஆச்சிரமவாதிகள் எல்லோரும் விருந்தினரும் கலந்து கொள்வார்கள்.

ஆச்சிரம நிர்வாகம் முழுவதும் அன்னையின் கையிலேயே இருந்தது. அன்னையின் சேவை அளப்பரியது. ஒருமுறை நாங்கள் பதின்மூன்று பேர் தென்னிந்திய யாத்திரை செய்து சுவாமிகளின் சந்நியாச தினத்திற்கு ஆனந்தாச்சிரமம் சென்றோம். ஓர் ஆச்சிரமவாதி அழுக்குத் துணிகளை எல்லாம் வாங்கி வருமாறு அன்னை கூறியதாகக் கூறினார். ஒவ்வொருவரும் சராசரி பத்துத் துணிகளுக்குக் குறையாமல் கொடுத்தோம். அடுத்தநாட் காலையில் அத்தனை துணிகளையும் அன்னை தான் தோய்க்கக் கண்டோம். எல்லோரும் கண்ணீர் விட்டு அழுதோம். சேவை என்றால் இதுவல்லவோ சேவை. சேவையின் திரு உருவமே அன்னை கிருஷ்ணாபாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை உணவின் போது நாங்கள் பதின்மூன்று பேரும் ஒரு பந்தியில் உண்ணவில்லை. 3,4 பந்திகள் நடந்தன. இருநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அவ்விழாவிற்கு வந்திருந்தனர். இலங்கையிலிருந்து வந்தவர்களில் மூவர் உண்ணவில்லை என்று அன்னையின் அழைப்பு வந்தது. அது உண்மை. இதை எப்படி அன்னை அறிந்திருக்கக்கூடும். மூவர் ஓர் அலுவலாக வெளியே சென்றிருந்தனர். அவர்கள் சென்றதையோ வந்ததையோ யாரும் அறியார். அப்படியானால் அன்னைக்கு எப்படித் தெரிந்தது என்றொரு கேள்வி. அதுதான் அன்னையின் சேவையின் சக்தி. தியான சக்தி என்றே கூறவேண்டும். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அன்னையாகவே கிருஷ்ணாபாய் விளங்கினார். அதனாலேயே அன்னை கிருஷ்ணாபாய் என்னும் பெயரையும் பெற்றார்.

சுவாமிகள் ஆத்மீக விஷயங்களைக் கவனித்துக் கொண்டிருக்கையில் அன்னையோ ஆச்சிரம நிர்வாகத்தைச் செவ்வனே கவனித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு பெண்மணியும் வீட்டு நிர்வாகத்தைப் பற்றி அன்னையிடம் கற்றுக்கொள்ள வேண்டியன அனேகம் இருந்தன.

ஏதாவது விடயங்களில் ஆலோசனை செய்தால் அன்னையின் தீர்ப்பே முடிவானதாகக் கருதப்பட்டது. அந்த அளவுக்கு அன்னை எல்லா விடயங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். உதாரணமாக ஆச்சிரமத்தில் ஒரு கட்டிடம் கட்ட வேண்டியிருந்தது. அதற்குப் பலரும் பலமுறைகளைச் சொன்ன போதிலும் அன்னையின் தீர்வே கடைசி ஆலோசனையாகப் பெறப்பட்டது.

அன்னையின் சமய சாதனைகள் எல்லாம் கர்மயோக சாதனைதான். அவர் வேலை செய்யும் போதே நாமஜெபமும் செய்து முடித்து விடுவார். எல்லா வேலைகளிலும் அன்னையார் பங்கேற்றுக்கொள்வார். எந்த வேலையும் அவரைப் போல பரிசுத்தமாகச் செய்து முடிக்க யாரும் இல்லை. இதனால் வேலைக்காரர் எல்லோருமே அன்னையின் பார்வையிலிருந்து தப்பமுடியாது.

ஒருமுறை ஒரு வேலைக்கார அம்மா ஆச்சிரமத்தில் வேலை அதிகமாய் இருந்த வேளையில் ஏதோ சாட்டுச் சொல்லி வீட்டிற்குச் சென்றுவிட்டார். அடுத்தநாட் காலையில் அவர் வந்ததும் ஆச்சிரமத்தை விட்டுச் சென்றது முதல் அவர் படுக்கைக்குச் சென்றது வரை உள்ள விடயங்களை அப்படியே அடுக்கடுக்காய்ச் சொன்னார். அன்னை அவரைக் கண்டிக்கவே இல்லை. கடுகடுத்துப் பேசியதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. கால் கை எல்லாம் நடுங்க உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுக்க அன்னையிடம் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அன்னையின் அந்தத் தருணத்திலும் ஒரு புன்முறுவலையே பூத்தார். சிலசமயங்களில் அன்னையார் வேலைக்காரருக்கு அவர்களது பாத்திரங்களைக் கழுவி அவரே உடனிருந்து உணவு பரிமாறுவார். இது ஒன்றே அன்னையின் நிர்வாகத் திறமையின் இரகசியமாகும்.

அன்னையும் சுவாமியும் அவர்களுடைய சீடரிற் சிலருமாக அகில உலக சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டனர். சில இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பு அடியேனிடம் ஒப்படைக்கப்பட்டது. முன்கூட்டியே திட்டங்கள் தீட்டிச் சீரான முறையில் அந்த யாத்திரையை ஒழுங்கு செய்திருந்தேன். உடன் வந்திருந்தவர்கள் அத்தனை பேரையும் உண்ணச் செய்து சுவாமியை ஆறுதல் எடுக்கச் செய்து விட்டுத்தான் உண்பது அடியேனுடைய வழக்கம். நாங்கள் தங்கியிருக்கும் வீடுகளில் உள்ளவர்கள்கூட அடியேன் உண்டேனோ இல்லையோ என்று கேட்கத் தவறிவிடுவார்கள்.

அன்னை சுவாமிகளை உறங்கச் செய்துவிட்டு அடியேன் சாப்பிடும் இடத்திற்கு வந்துவிடுவார். நீ நன்றாகச் சாப்பிட்டால் தானே எங்களுடைய யாத்திரையில் எங்களுக்கு உன்னால் உதவி செய்யமுடியும். அன்னை தனது கையினாலேயே உணவு பரிமாறுவார். ஒரு நாள் எனது கை விரலிற் சிறு காயம் ஏற்பட்டு விட்டது. அன்னையே உடனிருந்து உணவைக் குழைத்து ஊட்டினார். அடியேனுடைய கண்கள் கலங்கிவிட்டன. "அம்மா இந்தக் காயம் ஏன் வந்தது" தெரியுமா? உங்கள் கையினால் உண்பதற்காகத்தான் இக்காயம் வந்தது என்றேன். இல்லாவிட்டால் இக்காயம் வந்திருக்கவே நியாயம் இல்லை. கிருஷ்ணாபாய் அவர்கள் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அன்னையாகவே விளங்குவதைக் கண்டு பூரிப்படைந்தோம். மணிவாசகர் கூறிய பால் நினைந்தூட்டும் தாய்க்கு உதாரணமாகக் கூறினால் அன்னையாரையே கூறவேண்டும்.

அடியேன் தங்கிய இடங்களிற் சுவாமிகளைப் படுக்கச் செய்துவிட்டு அடியேனுக்குப் படுக்கை, படுக்கை விரிப்பு, தலையணை முதலியன சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துச் செல்வார்.

ஒருமுறை நண்பர் ஒருவருக்கு அடியேனுடைய தலையணையும் போர்வையையும் கொடுத்துவிட்டு அடியேன் வெறும் பாயில் படுத்துவிட்டேன். பகல் முழுவதும் அலைச்சல் இருப்பதனால் படுத்த உடனேயே அயர்ந்து தூங்கிவிடுவோம். அன்னை வந்து பார்த்த போது அடியேன் வெறும் பாயிற் படுத்து உறங்குவதைக் கண்டு ஓடிச்சென்று தனது தலையணையைக் கொண்டு வந்து அடியேனுடைய தலைக்கு வைத்துத் தனது போர்வையால் போர்த்தியும் விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்ச்சி நீங்கியதும் உணர்வு வந்தது. படுக்கும் போது தலையணையை யும் இல்லை. போர்வையும் இல்லையே. அன்னை அந்த வீட்டுக்கார அம்மாவிடம் செல்லமாகக் கடிந்து கொண்டாராம். அடுத்தநாள் அந்த அம்மா அடியேனுக்குக் கூறினார். அன்னையின் அன்புக்கு எல்லையில்லை. அது ஆழம் காணமுடியாத அன்பு. இந்த அன்பை அடியேனால்தான் உணர முடிந்ததே தவிர வேறு யாராலும் உணரமுடியவில்லை.

ஆனந்தாச்சிரமம் செல்பவர்களில் இலங்கை வாசிகளிடம் அடியேனைத் தெரியுமா என்றும் சுகமாக இருக்கிறாரா என்றும் அன்னையார் விசாரிக்கத் தவறுவதில்லை. இந்த அன்புணர்வுதான் அடியேனை வாழ வைக்கிறது என்பது அடியேனுடைய நம்பிக்கை.

அகில உலக யாத்திரையின் போது அன்னையும் சுவாமிகளும் நாவலப்பிட்டிக்கு வருகை தந்தார்கள். பாடசாலை மண்டபம் ஒன்றில் சுவாமிகளுடைய பேச்சும் ஆத்மஜோதி நிலையத்தில் பாதபூஜையும் நடைபெற்றன. 6 மணிக்கு பேச்சு என்று நோட்டீசில் கண்டிருந்தது. சுவாமிகள் சரியாக ஆறுமணிக்கு மேடைக்கு வந்தார்கள்.

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம் என்று தொடங்கினார். வரவேற்புரை தலைமையுரை மாலை அணிதல் எதுவுமே நடைபெறவில்லை. சரியாக ஏழு மணிக்கு பேச்சை முடித்தார். ஆறுமணி என்றால் கூட்டம் ஏழுமணிக்குத் தானே ஆரம்பமாகும் என்று நினைத்தவர்கள் எல்லோரும் ஏமாந்து போனார்கள்.

அடுத்த நாட்காலை 7¼ மணிக்குப் பாதபூஜை என்று கூறப்பட்டது. முதல்நாள் ஏமாந்தவர்கள் எல்லோரும் ஆறுமணிக்கே வந்துவிட்டனர். மகான்களின் தரிசனம் எங்கள் வாழ்க்கையிலும் பல திருப்புமையங்களை உண்டாக்கும் என்பதை உணர முடிந்தது.

**நா.முத்தையா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி தங்கக் கம்பி

சீதையை இராவணன் புஷ்பக விமானத்தில் தூக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அழுது புலம்பியபடி தனது நகைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி கீழே எறிந்து கொண்டே சென்றாள் சீதை.

அவளைத் தேடிக் கொண்டே வந்த வானரங்கள், அந்த நகைகளைக் கண்டெடுத்து வந்து இராமனிடம் காண்பித்தன.

இராமன் அந்த நகைகளை இலட்சுமணனிடம் காட்டி, "தம்பி, இந்தக் காதணிகள் சீதை அணிந்திருந்தவையா" எனக் கேட்டான்.

"எனக்குத் தெரியவில்லை அண்ணா!" என்றான் இலட்சுமணன்.

"இந்த முத்துமாலையைப் பார்.... இது சீதையுடையதா பார்த்துச் சொல்!"

"இதைப் பற்றியும் எனக்குத் தெரியவில்லை அண்ணா!

சரி, இந்தக் கால் சிலம்புகளைப் பார். இவை உன் அண்ணியார் அணிந்திருந்தவையா?"

இவ்வாறு இராமன் கேட்டவுடனேயே

முகம் மலர்ந்த இலட்சுமணன் "ஆமாம் அண்ணா. இவை அண்ணியார் அணிந்திருந்த சிலம்புகள்தான்!" என்றான் வியப்புடன்.

தன் அண்ணியான சீதையை, வணங்கும் போது அவள் பாதங்களை மட்டும்தான் பார்த்திருக்கின்றான் இலட்சுமணன். எந்தச் சந்தர்ப்பத்திலும் சீதையைத் தலைநிமிர்ந்து அவன் பார்த்திராததால் காதணிகளையும் கழுத்தணிகளையும் அவனால் அடையாளம் காட்ட முடியவில்லை.

(தம்பி தங்கத் தம்பிதானே!)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமியார்?

(சுவாமி தேஜஸானந்தர்)

ஒரு காலத்தில் ஓர் இளம் சன்னியாசி வாழ்ந்து வந்தார்.

ஆரவாரமும் ஆடம்பரமும் அந்தச் சன்னியாசிக்கு அறவே பிடிக்காதவை. ஏனென்றால் ஒருவன் இவற்றினால் கடவுளை அடையவே முடியாது என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார்.

அவர் தம்முடைய பிரார்த்தனையின் போது உலகிலுள்ள எல்லா உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று பிரார்த்திருப்பது வழக்கம்.

மலைச்சாரலில் தங்கிக் கடுமையான ஆத்ம சாதனங்களை அவர் பழகினார். தனிமையில் இருந்து ஆண்டவனைப் பிரார்த்திப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

நாளடைவில் அவர் அபார ஞானமுதிர்ச்சியைப் பெற்று ஒரு மகானின் நிலையை அடைந்தார்.

ஒரு சாதாரண மனிதர் இந்த அளவுக்கு ஞானமுதிர்ச்சியைப் பெற்றிருக்கிறார் என்பது தேவர்களுக்குத் தெரிய வந்தது.

ஆகவே ஒரு நாள் தேவர்கள் அனைவரும் தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்தார்கள். அந்தச் சன்னியாசி தங்கியிருந்த மலைச்சாரலை அடைந்தார்கள்.

"பெரியவரே! உங்களுடைய பரிசுத்தமான வாழ்க்கையை மனமார நாங்கள் பாராட்டுகிறோம். உங்களுக்கு அபூர்வமான சில சித்திகளைத் தர விரும்புகிறோம். உங்களுக்கு எப்படிப்பட்ட சித்திகள் வேண்டும் என்று சொல்லுங்கள். நாங்கள் அவற்றை மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தரக் காத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அவர் பதிலே பேசவில்லை. மௌனமாக மட்டுமே இருந்தார்.

தேவர்கள், "பெரியவரே! நோயாளிகளை நீங்கள் தொட்ட மாத்திரத்திலேயே குணப்படுத்தும் சித்தியை உங்களுக்குத் தரட்டுமா? அதைக் கொண்டு உலக மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்யலாம்" என்று சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பகவான் உலகிலுள்ள ஜீவராசிகளையும் மக்களையும் படைத்தாரோ, அவரே நோயாளிகளைக் குணப்படுத்தும் பணியையும் கவனித்துக்கொள்வார். அவரே அதைச் செய்யட்டும்.

இது சன்னியாசியின் கருத்தாக இருந்தது.

"உலகம் முழுவதும் உங்களைப் போற்றிப் புகழும்படி செய்கிறோம். அதையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று தேவர்கள் மீண்டும் தெரிவித்துக் கொண்டார்கள்.

சன்னியாசி அதற்கும் சம்மதிக்கவில்லை. வேண்டாம், என்னைவிட்டு விடுங்கள். சித்திகள் தரும் விஷயத்தில் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். நீங்கள் சொல்வதைப் போல மக்கள் என்மீது ஈடுபாடு கொண்டு போற்றிப் புகழ ஆரம்பித்தால் யாரை நினைப்பதற்காக மனித வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கடவுளையே மறந்துபோய் விடுவார்கள். அதைவிடப் பெரிய தீமை உலகிலேயே கிடையாது. என்னை அந்த நிலையில் வைத்து விடாதீர்கள் என்று மன்றாடி உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

தேவர்கள் விட்டுவிடுவதாக இல்லை. "நீங்கள் எங்களிடமிருந்து ஏதாவது ஒரு சித்தியைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இது எங்கள் பிரார்த்தனை" என்று ஏகோபித்த குரலில் அனைவருமாகச் சேர்ந்து சொன்னார்கள். அவர்களுடைய குரலே தெய்வத்தின் சந்நிதியில் பிரார்த்திப்பது போலவும் யாசிப்பது போலவும் இருந்தது.

சன்னியாசி சில விநாடிகள் யோசித்தார். "சரி எனக்கே தெரியாமல் நான் உலக மக்களுக்கு நன்மைகளைச் செய்யும்படி செய்யுங்கள்"என்று கேட்டுக் கொண்டார்.

சரி என்று ஒத்துக்கொண்ட தேவர்கள் இந்த நிமிடம் முதற்கொண்டு உங்களுடைய நிழல்பட்ட மாத்திரத்திலேயே நோய், துன்பம், பாவம் ஆகியவை பறந்தோடி விடுவதாகுக! ஆனால் இப்படி ஒரு சித்தியை நீங்கள் பெற்றிருப்பது உங்களுக்கே தெரியாமல் இருப்பதாகுக" என்று மனதால் சங்கல்பித்தார்கள்.

பிறகு, தேவர்கள் அனைவரும் மகரிஷியிடம் விடைபெற்றுக்கொண்டு தேவலோகம் திரும்பினார்கள். தேவர்கள் தமக்குக் கொடுத்துச் சென்ற சித்தியைப் பற்றி சன்னியாசிக்கு ஒன்றுமே தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு அந்தச் சன்னியாசி நடந்து சென்ற இடமெல்லாம் அவர் நிழல் பட்ட மாத்திரத்திலேயே காய்ந்த செடி கொடிகள் துளிர்த்தன. வறண்ட நீரூற்றுகள் சுரக்க ஆரம்பித்தன. தரிசு நிலங்கள் செழித்தன. துன்புற்றவர்கள் மன அமைதி பெற்றார்கள். நோயாளிகள் தங்களை வருத்தும் பிணி நீங்கிக் குணம் அடைந்தார்கள். இவ்விதம் சாந்நித்ய விசேஷம் விரும்பத்தக்க பல நல்ல மாற்றங் களை உண்டு பண்ணியது.

ஆனால் இத்தகைய மாறுதல்கள், தேவர்கள் தமக்குத் தந்த சித்தி காரணமாகத்தான் ஏற்படுகின்றன என்பது அந்தச் சன்னியாசிக்குத் தெரியவே தெரியாது. மாறுதல்கள் நிகழ்வதைத் தமது கண்முன்னாலேயே அவர் பார்க்க நேர்ந்தபோதும் அவற்றை அவர் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் கவனிக்காதவரைப் போலவே இருந்து வந்தார்.

அவர் எப்போதும் போலவே மக்களுடன் பேசாமல் வீதியில் செல்வார். அவராக எதுவும் பேசமாட்டார். ஆனால் மக்கள் அபூர்வமாகத் தாமாக முன்வந்து ஏதாவது கேட்டால் அன்பு ததும்ப அவர்களுக்குப் பதில் சொல்லுவார். மக்களும் அவரிடம் அவருக்குச் சித்தி இருப்பதைப் பற்றிச் சொன்னது கிடையாது.

தண்ணொளி பரப்பும் நிலவு போலவும், நறுமணம் கமழும் மலர் போலவும், கைமாறு கருதாத மேகம் போலவும் பூலகில் வாழும் பரமஹம்சர் ஒருவரின் வாழ்க்கையாக அவரது வாழ்க்கை அமைந்தது. அவரைப் பார்த்த போதும் நினைத்தபோதும் மக்கள் அவரை மனதிற்குள்ளாகவே போற்றித் துதித்தார்கள். அவரோ எளிமையும் அமைதியும் கூடிய தமது வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

கதையில் சொல்லப்பட்ட சன்னியாசியின் வைராக்கியமும் வாழ்க்கை முறையும் பக்தி வாழ்க்கையில் ஈடுபடுபவர்களில் ஒருசாராருக்கு நல்லதொரு படிப்பினையாக விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசன் மெயில்

சங்கரனும் ரமேஷும் பள்ளித் தோழர்கள். வறுமையால் சங்கரன் வேதம் படித்தான். அப்பாவுக்குத் துணையாக அர்ச்சகரானான். ஆனால் ரமேஷோ வசதியானவன் கம்பியூட்டர் படித்து முடித்தான்.

ஒருநாள் ரமேஷ் சங்கரனைத் தேடி வந்தான். "சங்கரா, இன்னிக்குத் தான் ஈமெயில் வந்துச்சுடா... அமெரிக்காவில் எனக்கு வேலை. நீயோ வெறும் வேதம் படிச்சிட்டு இந்த அக்ரஹாரத்தையே சுத்தி வரப் போறியேடா. உன்னைப் பிரிஞ்சு போறதுதான் எனக்கு வேதனையா இருக்குடா!" என்றான்.

"எல்லாம் பகவான் செயல்" என்று புன்னகையுடன் விடை கொடுத்தான் சங்கரன்.

ஒருமாதம் கழித்து அமெரிக்காவில்......

ரமேஷ் வேலையில் சேரப்போகும் நாள். ஆபீஸ் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஓர் அழகான சிவன் கோயில். ஆர்வம் மேலிட, காரைவிட்டு இறங்கி ஆலயத்தினுள் சென்றவனுக்கு ஆச்சரியம். அங்கே அர்ச்சகத் திருக்கோலத்தில் கற்பூரத் தட்டுடன் சாட்சாத் நண்பன் சங்கரனேதான்!

வாய்பிளந்து நின்ற ரமேஷை வரவேற்றான் சங்கரன். "வா ரமேஷ்! அன்னிக்கு நீ வந்துபோன அடுத்த வாரமே இந்தக் கோயிலுக்கு அர்ச்சகர் வேண்டுமென்று அப்பாவைத் தேடி சிலர் வந்தாங்க. அவங்களுக்கு என் வேதபண்டிதம் பிடிச்சுப்போச்சு. அதான் இப்ப வேதம் படிச்ச எனக்கும் வெளிநாட்டுல வேலை. ஆனால் ஒரு வித்தியாசம். உனக்கு ஈமெயில்ல வேலை வந்தது. எனக்கு ஈசன் மெயில்ல வேலை வந்தது. எல்லாம் ஈசன் செயல்" என்று கூறிச் சிரித்தான் சங்கரன். ரமேஷ் மௌனமாக நின்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு சீரிய குணங்கள்

ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்கின்ற ஆறு முக்கிய குணங்களை இறைவன் பெரிதும் பாராட்டுகின்றார். இந்தக் குணங்களை வளர்த்துக் கொண்டால் ஒருவன் தன்னை உயர்த்திக்கொண்டு இறைவன் அருளை எளிதில் பெற முடியும். அந்தக் குணங்கள் என்னவென்று பார்ப்போம்.

**"அனபேக்ஷா"** – எதிர்பார்ப்பும் ஆசையும் இல்லாமல் இருப்பது.

இந்த மண்ணுலகில் மனிதன் எதிர்பார்ப்புக்களும் ஆசைகளும் இல்லாமல் வாழ முடியுமா? என்பது கேள்வி. ஒவ்வொரு மனிதனும் தியாகத்தின் அடிப்படையிலேயே தன்னுடைய ஆசைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறியுள்ளார். அந்த நிலை எப்பொழுது ஏற்படும்?

நம்முடைய செயல்களெல்லாம் பிறர் நன்மை கருதி, இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் பொழுது அவற்றில் ஆசைகளோ எதிர்பார்ப்புக்களோ இருக்காது. அத்தகைய செயல்கள் எல்லாம் நற்செயல்களாய்த்தான் இருக்கும். அனபேக்ஷா என்பது ஆசையில்லாமல் இருத்தல் என்று அர்த்தமல்ல. எல்லா செயல்களையும் சுயநலமில்லாமல் பிறர் நலம் கருதிச் செய்து அதனை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதே இதன் தாற்பர்யம்.

"சுசி" – சுசி என்பது சுத்தத்தைக் குறிக்கும். அகமும் புறமும் சுத்தமாய் இருக்கவேண்டும். சமையல் செய்வதற்கு ஒரு பித்தளைப் பாத்திரம் தேவை.

ஈய முலாம் பூசப்படாத ஒரு பாத்திரத்தில் சமைத்தால், சமைத்த பொருள் கெட்டுவிடும். நமது உடல் ஈய முலாம் பூசப்படாத பித்தளைப் பாத்திரத்திற்கு ஒப்பாகும். அதில் பூசப்படும் ஈய முலாமே, பிரேமை அல்லது அன்பு ஆகும்.

மனித உடலின் உள்ளும் புறமும், அன்பு நிறையும் பொழுது, அது பரிசுத்தமாகி விடுகிறது. நாம் செய்கின்ற காரியங்களை பிறர் நலன் கருதி, கடவுளுக்கு அர்ப்பணம் செய்யும் பொழுது, அது புறச் சுத்தம் ஆகிவிடுகிறது.

"தக்ஷா" - என்பது மன உறுதியைக் குறிக்கும். உயர்ந்த கொள்கை களிலிருந்து வழுவாமல், செயலாற்றும் வலிமை தக்ஷா எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வி கண்டு அஞ்சாமல் விடா முயற்சியோடு செயலாற்ற வேண்டும். ஓர் உண்மையான பக்தன் இறைவன் திருவடிகளை அடையும்வரை தன் கொள்கைகளிலிருந்து வழுவுவதில்லை. இத்தகைய திடச் சித்தமே தக்ஷா எனப்படும்.

உதாசீனம் - நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் பாதிக்கப்படாமல் பற்றற்று இருப்பது உதாசீனம் எனப்படும். கடமையை மட்டுமே ஒருவன் செய்யவேண்டும். பலன்களில் பற்று வைக்கக்கூடாது. பொது ஸ்தாபனங்களில் செயலாற்றும் போது பரிசுகளையும் பாராட்டுக்களையும் எதிர்பார்த்துச் செயல்படக்கூடாது. அத்தகைய மனப்பான்மையை வளர்த்துக்கொண்டால் ஒருவரிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்படாது.

**கதம் யதா** – கடந்த காலத்தை நினைத்து அல்லது எதிர்காலத்தை எண்ணி கலங்காமல் இருக்கும் தன்மையை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளவேண்டும். கடந்த காலம் என்பது காலத்தினால் விழுங்கப்பட்ட ஒன்று. எதிர்காலம் என்பது காலத்தால் மறைக்கப்பட்டது. கடந்த காலத்தை மீண்டும் உருவாக்க முடியாது. எதிர்காலம் என்னவென்று தெளிவாகத் தெரியாது. எனவே இவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை.

மனிதன் சிந்திப்பதும் செயலாற்றுவதும் நிகழ்காலத்தைப் பற்றி இருக்கவேண்டும். நிகழ்காலம் என்பது கடந்த காலத்தினால் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம். எதிர்காலத்திற்கு ஆதாரமாக இருக்கலாம். எனவே அது முக்கியமானது. அந்த நிகழ்காலத்தில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**ஸர்வ தம்ப பரித்யாகி** – முற்றிலும் அமைதியான நிலையில் இருக்கின்றவன் என்பது பொருள். ஆடம்பரமில்லாமல் தன்னடக்கத்தோடு வாழ்கின்றவன் அமைதியாக இருப்பான். ஆடம்பரம் இருந்தால் ஆத்மானந்தம் இருக்காது.

இறைவனுடைய ஆறு பரிபூரண அருளைப்பெற மேற்கூறிய உயர்ந்த குணங்களை நமக்குள் உருவாக்கிக்கொள்ள வேண்டும். கடவுளுடைய ஆணையை நிறைவேற்றினால்தான் அவருடைய அருளைப் பெற முடியும். தன்னலமில்லாத தன்மை. எதிர்பார்ப்புக்கள் இல்லாத மனம். எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் இயல்பு ஆகியவை யாரிடத்தில் உள்ளதோ அவர்கள் தெய்வீகமான அன்போடு திகழ்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயலையோ, பொருளையோ இறைவனுக்கு அர்ப்பணிக்கும் முன்பு அதனால் இறைவன் மகிழ்ச்சியடைவாரா என்பதை முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு தபால் கடிதம் அல்லது பார்சல் சரியாக பேக் செய்யப்பட்டு, விலாசமும் சரியாக எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் சரியான தபால் தலை ஒட்டவில்லையென்றால் அது சேர வேண்டியவர்களிடம் போய்ச் சேராது.

அதுபோல, நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் மீதும் அன்பு எனும் முத்திரையை அவசியம் போட வேண்டும். அப்போது அது கண்டிப்பாக ஆண்டவனுக்கு அர்ப்பணமாகத் தகுதியுடையதாகும்.

இரண்டு மரக் கட்டைகளை விரைவாக உரசினால்தான் நெருப்பு உண்டாகும். பாலை நன்றாகக் கடைந்தால்தான் வெண்ணெய் திரளும். அதுபோல நாமும் இறைவனது அருளைப் பெற தொடர்ந்து சாதனை செய்ய வேண்டும்.

“சரணாகதி” என்பது நாம் ஒன்றைக் கொடுப்பதும், அதைக் கடவுள் எடுத்துக்கொள்வதும் அல்ல. சரணாகதி என்பது கொடுப்பவரும் கொள்பவரும் ஒருமுகப்பட்டுச் செயல்படும் ஒரு காரியமாகும். சரணாகதி அடைபவன் அகங்காரமும் சுயநலமும் இல்லாத நிலையைப் பெற்றிருக்க வேண்டும்.

கடவுள் நம்முடைய பிரார்த்தனைகளுக்கு செவி சாய்க்கின்றார். மனம் வருந்தி, திருந்தும் போது நம்முடைய தவறுகளை அவர் மன்னிக்கத் தயாராக இருக்கிறார். அதனால் இதையே உத்தரவாதமாக எடுத்துக்கொண்டு நாம் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கக்கூடாது.

பல சமயங்களில் கடவுளை நாம் பல்வேறு வடிவங்களில் வழிபாடு செய்கிறோம். ஆனால் இந்த வடிவங்கள் மட்டும் கடவுள் என்று எண்ணிவிடக் கூடாது. உதாரணமாக: தசரதருடைய நான்கு புதல்வர்களும் நான்கு மனிதர்களை மட்டும் குறிக்கவில்லை. அவர்கள் நான்கு வேதங்களின் பிரதிநிதிகள். ராமன் - ரிக் வேதம், பரதன் - யஜுர் வேதம், லஷ்மணன் - சாமவேதம், சத்ருக்னன் - அதர்வண வேதம். இது போல ஒவ்வொரு கடவுள் வடிவத்திலும் ஒரு தத்துவம் உள்ளது. அதனை உணர்ந்து கடவுளை வழிபட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜ கோவிந்தம்

தினமும் வேதத்தை அத்யயனம் செய்; அதில் கூறப்பட்டுள்ள கர்மங்களைச் செய். உன் கடமைகளைச் செய்வதன் மூலம் இறைவனை வழிபடு. ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள உதவும் சடங்குகளைச் செய்யும் எண்ணத்தைக் கைவிடு. பாவக் கூட்டங்களை அறவே ஒழித்துவிடு. உலக வாழ்க்கையில் காணப்படும் இன்பங்களின் குறைபாடுகளை நன்கு யோசித்துப் பார். ஆத்மாவை அறிவதில் ஆசைகொள். விரைவில் வீட்டைத் துறந்து செல். ஆத்மஞானி ஒருவரை உனது குருவாக ஏற்றுக்கொள். அவரது தாமரைத் தாள்களுக்கு சேவை செய். ஆத்ம ஞானம் அருளும் படி அவரிடம் வேண்டிக்கொள் என்று ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் நமக்கு வழிகாட்டியுள்ளார். நம் வாழ்வை வளம்பெறச் செய்ய ஸ்ரீ ஆதி சங்கரர் காட்டியுள்ள வழி முறைகள் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும்.

ஆதி சங்கரர் அவதரிப்பதற்கு முன்னுள்ள காலத்தில் பூலோகத்தில் துஷ்ட சமயங்கள் தோன்றி பரவ ஆரம்பித்தன. சாஸ்த்திரத்திற்கு எதிரான பலவிதமான உபாயங்கள் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. இதனால் ஜனங்களுக்கு வேதம் யக்ஞம் சாஸ்திரங்களில் நம்பிக்கை குறைந்து யக்ஞம் செய்வது தடைப்பட்டது. தேவர்களுக்கு அவிர்பாகம் கிடைக்கவில்லை.

அதனால் அவர்கள் பரமேஸ்வரரின் ஸன்னதியில் முறையிட்டனர். இது கேட்டு பகவான் பூலோகத்தில் ஏற்பட்டுள்ள நாஸ்திக பிரசாரங்களை ஒடுக்க காலடியில் ஸ்ரீ ஆதிசங்கரராய் அவதரித்தார்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் அவதாரம் செய்வதற்கு முன் நம் ஸனாதன (அதாவது ப்ராசீனமான) தர்மம் க்ஷீண தசையில் இருந்து வந்தது. க்ஷீண தசையென்றால் என்ன? தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பதில் ஸ்ரத்தை குறைந்தால் அது க்ஷீணதசை எனப்படும். தர்மத்துக்கு பிரமாணமான வேதத்தில் நம்பிக்கை குறைந்தது.

வேதத்தை நம்பக்கூடாது என்ற பிரசாரம் தீவிரமாய் இருந்தது. ஆகவே ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் முதல்படியாக வேதத்திற்கு சரியான விளக்கம் கூறினார்.

வேதத்திலும் சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டுள்ள கர்மங்களை ஸ்ரத்தை யுடன் செய்யவேண்டும். ஸ்ரத்தை என்றால் "சாஸ்திர வாக்யமும் ஸத்குரு வாக்யமும் உண்மையானது" என்ற அசையாத நம்பிக்கையாகும். மேலே கூறியபடி கர்மாக்களைச் செய்யாது போனால் பகவத் க்ருபை ஏற்படாது.

இம்மாதிரி விஷயங்களை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, நாஸ்திகப் பிரசாரத்தை முறியடித்தார் ஸ்ரீ ஆதிசங்கரர். பகவத் பாதாள் அருளிய பாஷ்யங்கள் பிரகாரம் நாம் செயல்பட்டால் அக்ஞானத்திலிருந்து விடுபட்ட, ஞானத்தை அடைந்து மோக்ஷம் அடைய அருகதையுள்ளவர்களாவோம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஸ்லோகங்களை எழுதியிருந்தாலும் அவர்கள் அருளிச் செய்த "பஜ கோவிந்தம்" எனும் ஸ்லோகம், பகவானை அடைய, பாமரனுக்கு வழிகாட்டும், தத்துவங்கள் நிறைந்தவை. கலியுகத்தில் கோவிந்தனின் நாமமும், அவனைச் சரணடைந்து செய்யும் பக்தியும் சகல பாவங்களையும் போக்கி, எல்லா ஐஸ்வர்யங்களையும் நல்கும் என ஸ்ரீ பகவத் பாதாள் கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் எங்குள்ளது?

உனக்கு எப்போதாவது சில சமயங்களில் சந்தோஷம் இருக்கிறது அல்லவா? எப்போதும் அப்படியே சந்தோஷம் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறாய் அல்லவா?

"இதைப் பண்ணினால், துக்கம் வருகிறது. இதைப் பண்ணினால், ஆனந்தம் வருகிறது. எப்போதும் ஆனந்தம் சந்தோஷம் வருகிற காரியத்தையே செய்யவேண்டும்" என்று எண்ணுகிறாய் அல்லவா?

சந்தோஷசம் வரவேண்டும், மேலும் கொஞ்சம் ஆனந்தம் உண்டாக வேண்டுமென்றால், உடனே சினிமா பார்த்து வருவோம் என்று நினைக்கிறாய். அது ஓர் ஆனந்தம்.

சினிமா இல்லை; கொஞ்சநேரம் ரேசுக்குப் போய்விட்டு வரலாம் என்று நினைக்கிறாய். அதிலே ஆனந்தத்தை நீ உணர்கிறாய். இல்லைப் போனால், சபாவுக்குப் போய்க் கச்சேரி கேட்டு வரலாம் என்று நினைக்கிறாய்.

இப்படிக் காதினாலே கண்ணினாலே ஆனந்தம் உண்டாகும் என்று போகிறாய்.

ஒருவன் ஹோட்டலுக்குப் போய்ச் சுகமாகச் சாப்பிட்டுவிட்டு, ஆனந்தமாக வருகிறான். அவனுக்கு ஆனந்தம் நாக்கினாலே வருகிறது.

ஆகவே, காதினாலோ, கண்ணினாலோ, நாக்கினாலோ ஆனந்தம் உண்டாகவேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். காரணம், ஆனந்தம் என்பது அவ்வளவு உயர்ந்தது.

வீணாகப் பொழுதைப் போக்கி, வேலையின்றி உட்கார்ந்து இருந்து என்ன பிரயோஜனம்? அப்போது எங்கேயாவது போய்விட்டு வரவேண்டும் என்று தோன்றுகிறது.

வெளியிலே சினிமாவுக்கோ, கச்சேரிக்கோ போய்விட்டு வந்தால், ஆனந்தம் உண்டாகிவிட்டது போலத் தோன்றுகிறது. ஆனந்தம் தான் உயர்ந்ததாகத் தோன்றுகிறது.

சரி, ஆனந்தம் வேண்டும் கச்சேரி சினிமா இங்கெல்லாம் போனவுடன் ஆனந்தம் உண்டாகிறது. அந்த ஆனந்தம் எங்கேயிருந்து வருகிறது. வெளியிலிருந்து வருகிறதா? உள்ளே இருந்து வருகிறதா? அதைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்துக்கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளையைப் பறிகொடுத்து விட்டு ஒருவன் இருக்கிறான். அவனிடத்தில் போய், "சபாவிலே இன்று பெரிய கச்சேரி நடக்கிறதாம். வாங்க சார் போய்விட்டு வருவோம்" என்றால் அவன் வருவானா? வெளியிலே இருக்கும் ஆனந்தம் அவனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்குமா?

உள்ளே சரியாக இருந்தால் தானே வெளியில் இருப்பவை எல்லாம் அவனுக்கு ஆனந்தம் கொடுப்பவை போல இருக்கும். ஆகவே "ஆனந்தம் என்பது வெளியில் இருந்து உண்டாவதில்லை. அது உள்ளே இருக்கும் ஒன்றுதான்."

ஒருவன் தன் பாட்டுக்குச் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறான். ஒருவன் பக்தி பஜனைப் பண்ணிக்கொண்டிருக்கிறான். இன்னொருவன் ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிறான். சிலருக்குப் புத்தகத்தை எப்போது பார்த்தாலும் படித்துக் கொண்டிருப்பதே ஆனந்தமாக இருக்கிறது.

இந்த ஆனந்தம் எப்படி உண்டாகிறது? வெளியிலிருந்தா வருகிறது? இல்லை. உள்ளேதான் ஆனந்தம் இருக்கிறது.

சினிமாவுக்குப் போவது, கச்சேரி கேட்பது, புஸ்தகம் படிப்பது என்கிற போது அவன் உள்ளே இருக்கும் படியான ஆனந்தம் பளிச்சென்று தெரிகிறது.

மற்ற சமயங்களில் அதைக் கவலைகள், எண்ணங்கள் ஆகிய மாயை மூடி விடுகிறது.

வருகிறது, போகிறது என்கிற ஆனந்தம் இருக்கிறதே இதில் வருவதுதான் ஆரம்பம், போவது தான் முடிவு.

இதற்கும் ஒரு காலம். ஓர் இடம் எல்லாம் வேண்டியிருக்கிறது. அதுவும் வெளியிலிருந்து வருகிறது இல்லை. உள்ளே இருக்கிறதுதான் அது. ஒரு விளக்கை வைத்துக்கூடையைப் போட்டுக்கவிழ்த்து வையுங்கள்.

அதன் மேல் ஒரு கம்பளியைப் போட்டால் வெளிச்சம் கொஞ்சம் கூட வெளியே வருவதில்லை. கம்பளியை எடுத்துவிட்டால் கூடையின் இடுக்கு வழியாகச் கொஞ்சம் வெளிச்சம் தெரிகிறது. கூடையையும் எடுத்துவிட்டால் பூரண ஒளி கிடைக்கிறது. ஒளி புதிதாக வந்ததா? இல்லை. மூடியிருந்ததை நீக்கியவுடன் இருக்கிற ஒளி நன்றாகத் தெரிகிறது. ஒரு பந்தல் போட்டிருக்கிறோம். சூரிய வெளிச்சம் அதன் ஓட்டை வழியாக உள்ளே வருகிறது. ஒரு குழந்தைக்கு அந்த ஒளி புதிதாக வந்தது போலத் தோன்றுகிறது. இருக்கிற சூரிய ஒளியை இந்தப் பந்தல் மறைத்துக்கொண்டிருக்கிறதே தவிர இது புதிய ஒளியை வரச்செய்யவில்லை என்று அப்போது நமக்குத் தெரிகிறது.

பந்தலை எடுத்துவிட்டால் இயற்கையான ஒளி எங்கும் கிடைக்கிறது.

அப்படி எங்கும் எப்போதும் நிறைந்திருக்கிற வஸ்துதான், எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றுதான் நம்மிடத்தில் மாயையினால் மூடப்பட்டிருக்கிறது. அதைதான் ஆனந்தம் அல்லது பரமாத்மா என்கிறோம்.

- காஞ்சி காமகோடி ஜகத்குரு பரமாச்சாரியாள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை விட்டகலாத மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம்

மண்ணிலே நல்லதொரு மங்கையர் திலகமாய்
மாண்புடன் வாழ்ந்திருந்த மங்கயர்க்கரசியே!
கண்ணியமும் கருணையுமுள்ள கண்மணியே தாயே
காலன் வந்துன்னின்னுயிரைக் கவர்ந்துதான் சென்றானோ?
விண்ணிலே விரிசடையான் வேதநாயகன் திருப்பாதம்
விரவியே சென்று நீர் கலந்துதான் வாழ்ந்திடவே
எண்ணியே சென்றீரோ எங்களது அன்னையே?
எங்களின் துயர்துடைப்பார் யாரம்மா இப்பூவுலகில்?

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்
சிந்தனைச் சிற்பியாய் வாழ்ந்த மங்கையர்க்கரசியே!
எந்தனை மகிழ்விக்கும் எண்ணரிய கருத்துக்களும்
ஏற்றமிகு தத்துவமும் எங்குதான் கேட்டிடுவோம்?
உந்தனை நினைக்கையிலே உள்ளமே இனிக்குதம்மா
உன்னினிய குரல்மட்டும் உச்சமாய்க் கேட்குதம்மா
கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் வாழ்ந்திருந்தீர்
காலனவன் வந்து தன் கடும்பசிதான் தீர்த்தானோ?

பிரிவால் மனம் வாடி
நாச்சிமார் கோயிலடி
**இராசையா ஸ்ரீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

காப்பு

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்திசூடி – திருவாத்திப்பூமாலையை அணிந்த சிவபெருமான்; அமர்ந்த தேவனை – விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை; ஏத்தி ஏத்தி – துதித்துத் துதித்து; யாம் தொழுவோம் - நாங்கள் வணங்குவோமாக.

**தொடர்ச்சி........**

**15.ஙப்போல் வளை**

ஙப் போல் - சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும் வழக்கம் இல்லாத ஙகரம் ஏனைய எழுத்துக்களோடு கூடிச் சொல்லாக்கத்தில் இடம்பெறுவது போல; வளை - நீயும் பிறரை அணைத்து நன்மை அடை (இதற்கு ஙகரம் ஒன்றே சொல்லாக்கத்துக்குப் பயன்படுவது. அதற்காக அவ்வரிசையிலுள்ள பயன்படாத ஏனைய பதினொரு உயிர்மெய்களும் அரிச்சுவடியில் இடம்பெறுகின்றன. அவ்வாறு சுற்றத்தைத் தழுவிக்கொள் என்றும் பொருள் கொள்ளலாம்)

**16. சனி நீராடு**

சனி - சனிக்கிழமை தோறும்; நீராடு - எண்ணெய் தேய்த்து முழுகும் வழக்கத்தைத் தவறவிடாதே

**17. ஞயம்பட உரை**

ஞயம்பட - பிறருடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படக் கூடியதாக; உரை - இனிய வார்த்தைகளையே பேசு.

**18. இடம்பட வீடெடேல்**

இடம்பட - தேவைக்கு மேல் அதிக பரப்பளவு கொண்டதாக; வீடுஎடேல் - வீடு கட்டாதே (அயலிலுள்ளவர்களின் வீட்டைப் பாதிக்கக்கூடிய திக்குகளில் வீடு கட்டாதே என்றும் பொருள் கூறலாம்)

**19. இணக்கம் அறிந்து இணங்கு**

இணக்கம் அறிந்து - நட்புக் கொள்வதற்கு வேண்டிய இயல்புகள் ஒத்திருப்பதை அறிந்து; இணங்கு - நீ ஒருவரோடு நட்புக்கொள்

**20. தந்தை தாய் பேண்**

தந்தை, தாய் - பெற்றோரை; பேண் - போற்றிக் காப்பாற்று.

**21. நன்றி மறவேல்**

நன்றி - பிறர் செய்த நல்லுதவியை; மறவேல் - என்றும் மறவாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தா நேயர்களுக்கு......

*அன்புடையீர்,*

இறைவன் திருவருளினாலும் மகான்களில் நல்லாசியினாலும் பக்தர்களின் நல்லெண்ணத்தினாலும் ஆத்மஜோதி 15வது இதழ் வெளிவந்துள்ளதை அறியத் தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகத் தொண்டு பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்

ஆத்மஜோதி தியான மணிமண்டபம்,ஏழாலை.

தொடர்பு:-
நா.முருகையா
ஊரெழு கிழக்கு,சுன்னாகம்.

***என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக***

### ஆத்மஜோதி ஆயுள் சந்தா வழங்கியவர்கள்

*திரு.ஆ.குணரத்தினம் - குகன் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

*திரு.து.குணநேசன் - மகா சில்க் அன்ட் பியூட்டி சில்க், நவீனசந்தை, யாழ்ப்பாணம்.*

*செல்வி.த.கிருஷ்ணப்பிரியா - கரி ஓம், பலாலி வீதி, உரும்பிராய்.*

---

| | | |
|---|---|---|
| 01.7.2006 | - | குமார ஷஷ்டி விரதம், இரவு நடேஷர் அமிசேகம் |
| 02.7.2006 | - | ஆனி உத்தரம் |
| 03.7.2006 | - | அட்டமி நவமி |
| 07.7.2006 | - | சயணஞகாதசி விரதம் |
| 08.7.2006 | - | சனிப்பிரதோஷ விரதம் |
| 10.7.2006 | - | பூரணை விரதம் |
| 14.7.2006 | - | சங்கடஹர சதுர்த்தி |
| 17.7.2006 | - | ஊரெழு கிளானைப்பதி பர்வபத்தினி அம்மன் கொடி, ஆடிப்பிறப்பு |
| 18.7.2006 | - | அட்டமி நவமி |
| 20.7.2006 | - | கார்த்திகை விரதம் |
| 21.7.2006 | - | ஏகாதசி விரதம் |
| 22.7.2006 | - | சனிப்பிரதோஷ விரதம் |
| 23.7.2006 | - | மாவிட்டபுரம் கந்தசாமி தேர் |
| 24.7.2006 | - | ஆடி அமாவாசை விரதம் |
| 25.7.2006 | - | கதிர்காமம் கொடி |
| 28.7.2006 | - | ஆடிப்பூரம் |
| 29.7.2006 | - | நாக சதுர்த்தி விரதம் |
| 30.7.2006 | - | நல்லூர் கந்தசுவாமி கொடி |
| 31.7.2007 | - | ஷஷ்டி விரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் இருக்கிறானா?

ஒரு பெரியவர் அரசமரத்தின் கீழ் அமர்ந்து கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தார். அங்கே ஒரு மாணவன் சென்றான். அவன், மிடுக்கும் சொல் துடுக்கும் உடையவனாகக் காட்சியளித்தான்.

"கடவுள் கடவுள் என்று கூறுவது மூடத்தனம். கடவுளை நீர் கண்ணால் கண்டிருக்கின்றீரா?"

"தம்பீ! காண முயல்கின்றேன்."

"கடவுளைக் கையால் தீண்டியிருக்கின்றீரா?"

"இல்லை"

"கடவுளின் குரலைக் காதால் கேட்டிருக்கின்றீரா?"

"இல்லை"

"கடவுள் மீது வீசும் மணத்தை மூக்கால் முகர்ந்திருக்கின்றீரா?"

"இல்லை"

"இல்லாதவொன்றை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அரிய நேரத்தை வீணடிக்கின்றீரே?"

"தம்பி! உன் சட்டைப் பையில் என்ன இருக்கின்றது?"

"இது தேன் பாட்டில்...."

"அப்பா! தேன் இனிக்குமா? கசக்குமா?"

"இது தெரியாதா.... தித்திக்கும்.....!"

"தம்பீ! தித்திக்கும் என்றனையே, அந்த இனிப்பு என்றது கறுப்பா? சிவப்பா?"

"ஐயா! தேனின் இனிமையை எப்படி இயம்புவது? இதைக் கண்டவனுக்குத் தெரியாது, உண்டவனே உணர்வான்."

பெயரியவர் புன்முறுவல் பூர்த்தார் "அப்பா! இந்தப் பௌதிகப் பொருளாக, ஜட வஸ்துவாக உள்ள தேனின் இனிமையையே உரைக்க முடியாது; உண்டவனே உணர்வான் என்கின்றாயே? ஞானப் பொருளாக, அனுபவ வஸ்துவாக விளங்கும் இறைவனும் அப்படித்தான், அனுபவத்தால்தான் உணர்தல் வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வெளியீடுகள்

- ஆத்மஜோதி
- ஏழாலை
- ஈழத்துச் சித்தர்கள்
- முப்பெரும் சித்தர்கள்
- நவராத்திரிப் பாமாலை
- கேதாரபத்திரி யாத்திரை
- இந்தோனேசியாவில் 2 வருடம்
- திருமுறைக் கதைகள்
- அர்ச்சனை மாலை ஆத்மஜோதி மண்டப வெளியீடுகள்
- பிள்ளையார் பெருங்கதை
- சிறுவர்களுக்கேற்ற பிள்ளையார் கதை
- புதிய சைவ வினாவிடை (1)
- விதியை வெல்வது எப்படி
- கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்; ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org